பக்கங்கள்:10 விலை : 30/-

# காலைக்கதிர்

Kalaikkathir

விடியல் 06 வள்ளுவர் ஆண்டு 2053 ஆடி 02 திங்கட்கிழமை 18.07.2022 கதிர் 255

### இது ரகசியம் அல்ல!

நாளை மறுதினம் நடைபெற உள்ள ஜனாதிபதி தேர்தலை ஒட்டி என்ன முடிவு எடுப்பது என்பது குறித்துத் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு நாடாளுமன்ற உறுப்பினர்கள் இன்று மாலை 5 மணிக்கு பூர்வாங்கமாகக் கூடி ஆராய இருக்கின்றனர். ☞2

# சிங்கப்பூரை விட்டு 15 நாள்களுக்குள் வெளியேறுங்கள்!



## கோட்டாவிடம் அந்நாட்டு அரசு நேரில் கோரிக்கை; இந்தியாவும் கதவடைப்பு

**இலங்கையின் முன்னாள் ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ தொடர்ந்து சிங்கப்பூரில் தங்கியிருப்பதால் பாதுகாப்புச் சிக்கல்கள் ஏற்படலாம். எனவே, அவர் 15 நாள்களுக்குள் சிங்கப்பூரை விட்டு வெளியேற வேண்டும்.**

**– இவ்வாறு சிங்கப்பூர் அரசு, கோட்டாபய ராஜபக்ஷவிடம் கோரிக்கை விடுத்துள்ளது.**

சிங்கப்பூர் அரசின் இந்தக் கோரிக்கையை அந்நாட்டு அமைச்சர் காசி விஸ்வநாதன் சண்முகம், கோட்டாபய ராஜபக்ஷவிடம் நேரில் தெரிவித்துள்ளார் என்று செய்திகள் வெளியாகியுள்ளன.

இலங்கையில் மக்கள் எதிர்ப்புப் போராட்டத்தின் ☞2

## எரிபொருள்கள் விலை குறைப்பு

நேற்றிரவு 10 மணி முதல் நடைமுறைக்கு வரும் வகையில் எரிபொருள்களின் விலைகள் குறைக்கப்பட்டுள்ளன.

அதனடிப்படையில் புதிய விலைகள் வருமாறு:- ☞2

## ஓரிரு நாள்களுள் ரஞ்சன் வெளியில்?



நீதிமன்ற அவமதிப்பு குற்றச்சாட்டில் தண்டனை பெற்று சிறைவாசம் அனுபவித்து வரும் முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் ரஞ்சன் ராமநாயக்கவை நாளை செவ்வாய்க்கிழமை (19 ஆம் திகதி) விடுதலை செய்ய அனைத்து ஏற்பாடுகளும் பூர்த்தியாக்கப்பட்டுள்ளதாக தகவல்கள் வெளியாகியுள்ளன. ரஞ்சன் ராமநாயக்கவை விடுதலை செய்வதற்கு தேவையான அனைத்து ☞2

## தமிழர் அபிலாஷையையும் கோட்பாடாக உள்வாங்கவேண்டும் போராட்டக்காரர்கள்

### குமார் குணரத்தினத்திடம் மனோ எம்.பி. வலியுறுத்து



தமிழர் அபிலாஷைகளையும் உள்வாங்க, காலிமுகத்திடல் போராட்டக் காரர்களை முன்னிலை சோலிசக் கட்சியின் பொதுச்செயலாளர் குமார் குணரத்தினம் வலியுறுத்த வேண்டும் என்று தமிழ் முற்போக்குக் கூட்டணியின் தலை வர் மனோ கணேசன் தெரிவித்தார்.

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவித்ததாவது:- ☞4

## ரணிலுக்கு எதிராக மீளவும் போராட்டம்

பதில் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவைப் பதவி விலக வற்புறுத்தி நாளை செவ்வாய்க் கிழமை முதல் நாடு முழுவதிலும் போராட்டங்கள் முன்னெடுக்கப் படும் என பல்கலைக்ககங்களுக்கு இடையிலான மாணவர் ஒன்றியத்தின் அழைப்பாளர் வசந்த முதலிகே நேற்றுப் பிற்பகல் தெரிவித்தார்.

மக்களை அவர்களுக்கு நெருங்கிய நகரங்களில் போராட்டங்களை நடத்த வருமாறு அவர் அழைப்பு விடுத்தார்.

ரணில் விக்கிரமசிங்கவைப் பதில் ஜனாதிபதி பதவில் இருந்து அகற்றுவதற்கு தொழிற்சங்கங்களும் வெகுஜன அமைப்புகளும் பெரும் நடவடிக்கைகளை முன்னெடுக்க ☞2

## ரணிலுக்கே 'மொட்டு' ஆதரவு; தீர்மானத்தில் மாற்றமில்லை!

### சாகர எம்.பி. திட்டவட்டம்



நாடாளுமன்றத்தில் எதிர் வரும் 20ஆம் திகதி நடைபெற வுள்ள புதிய ஜனாதிபதி பதவிக்கான தேர்தலில் ரணில் விக்கிரமசிங்கவை ஆதரிக்க வேண்டும் என்ற கட்சியின் தீர்மானத்தில் எந்த மாற்றம் இல்லை.

– இவ்வாறு ஸ்ரீலங்கா ☞2

## ஆறு தமிழ்த் தேசியக் கட்சிகளின் தலைவர்கள் ஒன்று கூடி ஆராய்வு!

தற்போதைய அரசிய நிலைவரம் குறித்து ஆறு தமிழ்த் தேசியக் கட்சிகளின் தலைவர்கள் இணையவழியில் நேற்றுக் கலந்துரையாடல் நடத்தினர் என்று ரெலோவின் பேச்சாளர் குருசாமி சுரேந்திரன் தெரிவித்தார்.

இது தொடர்பில் தமிழ்த் தேசியக் கட்சிகளின் ஒருங்கிணைப்பாளர் எனக் குறிப்பிட்டு அவர் அனுப்பி வைத்த செய்திக் குறிப்பில் தெரிவிக்கப்பட்டிருப்பவை வருமாறு:- ☞2

### ராஜபக்ஷக்களுடன் சேர்ந்து பிழைப்பு நடத்திய

## வடக்கு - கிழக்கு ஊழல்வாதிகளை உடனேயே கைதுசெய்ய வேண்டும்!

### மட்டக்களப்பில் கவனவீர்ப்புப் போராட்டம்



வடக்கு – கிழக்கு ஊழல்வாதிகளுக்கு எதிர்ப்புத் தெரிவித்தும், அவர்களை உடனடியாகக் கைது செய்யக் கோரியும் ☞2



## இனி இது...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

சம்பந்தரின் கொழும்பு இல்லத்தில் இந்தக் கூட்டம் நடைபெறவிருக்கின்றது. கொழும்பு அரசியல் கள நிலைமைகள் குறித்து, அதில் அதிகம் பரிச்சயம் உள்ள ஜனாதிபதி சட்டத்தரணி எம்.ஏ.சுமந்திரன் கூட்டத்தில் முதலில் விளக்குவார் என எதிர்பார்க்கப்படுகின்றது. எது, எப்படி என்றாலும் ரணில் விக்கிரமசிங்கவுக்கு எதிரான தீவிர நிலைப்பாட்டில் சுமந்திரன் இருக்கின்றார் என்று விடயம் அறிந்த வட்டாரங்கள் தெரிவிக்கின்றன. சஜித் - டலஸ் அழகப்பெரும கூட்டு வெல்வதற்குத் தேவையான வாக்குகளை வைத்திருப்பதாக அவர் நம்புகிறார். முத்தரப்புத் தேர்தலில் முதல் சுற்று வாக்குகளில் ரணில் அதிகம் பெற்றாலும், இரண்டாவது சுற்றில் சஜித்தோ அல்லது டலஸ் அழகப்பெருமவோ நிச்சயம் ரணிலைத் தாண்டி வெல்ல முடியும் என்ற நம்பிக்கை சுமந்திரனுக்கு இருப்பதாகத் தெரிகின்றது.

நாளை மறுதினம் நண்பகலில் விடயம் தெளிவாகிவிடும். அப்போது பார்க்கலாம்.

* * *

பலாலி - சென்னை சர்வதேச விமானப் போக்குவரத்து இந்தா ஆரம்பிக்கும், அந்தா ஆரம்பிக்கும் என இதுவரை இழுபட்டமை தெரிந்ததே.

இப்போது, இதுவரைத் தடைப்பட்டிருந்த எல்லா விடயங்களுக்கும் 'க்ளியர்' ஆகிவிட்டன என நேற்று மாலை கிடைத்த செய்தி தெரிவித்தது. பெரும்பாலும் எப்போது தொடங்கி சேவை நடைபெறும், கட்டண விவரங்கள் யாவை என்பவை பற்றிய அறிவித்தல் இன்று மாலை வெளியாகும் என விடயம் அறிந்த வட்டாரங்கள் தெரிவிக்கின்றன. சென்னைக்கும் பலாலிக்கும் இடையில் வாரத்தில் மூன்று சேவைகள் நடைபெறும்.

பலாலி - திருச்சி சேவை ஆரம்பிக்க ஓரிரு வாரங்கள் செல்லக் கூடும் எனக் கூறப்படுகின்றது.

எது, எப்படியோ பலாலி விமான நிலையத்தைத் திறந்து சர்வதேச விமான சேவைகளை மீள ஆரம்பித்தால் சரி.

* * *

நெல்லியடி மாலி சந்தியில் சனிக்கிழமை அதிகாலை வீதி ஓரத்தில் திருவிழா பார்த்துக் கொண்டிருந்தோரை பொலிஸார் துரத்தி வந்த ஹண்டர் ரக வாகனம் மோதித் தள்ளிவிட்டு ஓடி மறைந்தது அல்லவா?

அந்த ஹண்டர் வாகனம் மணல் லோட் ஏதும் இல்லாமல் நேற்று நெல்லியடி பொலிஸ் நிலையத்தில் தடுத்து வைக்கப்பட்டிருந்தது.

ஏழு பேரைப் பந்தாடிப் படுகாயப்படுத்திய ஹண்டரின் சாரதியையோ உரிமையாளரையோ பொலிஸார் கைது செய்தனர் என்று தகவல் இல்லை. இந்த வாகனத்தின் உரிமையாளர் ஒரு பொலிஸ்காரர் என்றும், சம்பவ சமயத்தில் அவரின் சொந்தச் சகோதரரே வாகனத்தைச் செலுத்தினார் என்றும் உள்வீட்டுத் தகவல் ஒன்று தெரிவித்தது. அதனால் சாரதியும், உரிமையாளரும் கம்பி நீட்டி விடலாம் என்ற சந்தேகம் பாதிக்கப்பட்ட தரப்பில் நிலவுகின்றது.

சரி பொலிஸ்காரரின் வாகனத்தை பொலிஸே - 'சேஸிங்' செய்யும் - துரத்தும் - அளவுக்கு விவகாரம் என்ன நடந்தது? வெறும் மணல் கடத்தல் மட்டும்தானா? வேறு ஏதும் உண்டா? ஆண்டவனுக்குத் தான் வெளிச்சம்.

– மின்னல் –

## வடக்கு - கிழக்கு...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

மட்டக்களப்பில் நேற்று கவனவீர்ப்புப் போராட்டம் இடம்பெற்றது.

தமிழ் இளையோர் மக்கள் இயக்கத்தின் ஏற்பாட்டில் மட்டக்களப்பு காந்தி பூங்காவுக்கு முன்னால் இந்தப் போராட்டம் முன்னெடுக்கப்பட்டது.

தமிழ்ச் சமூகத்தை மலினப்படுத்தி - அடகுவைத்து - ராஜபக்ஷ குடும்ப ஊழல்வாதிகளுக்குப் பின்னால் பிழைப்பு நடத்திய பலர் வடக்கு, கிழக்கில் உள்ளனர். எமது சமூகத்தை இழிவுபடுத்திய இந்த ஊழல்வாதிகள் அனைவரும் உடனடியாகக் கைதுசெய்யப்பட வேண்டும் - என்று போராட்டக்காரர்கள் கோரிக்கை விடுத்தனர்.

இந்த ஊழல்வாதிகள் கொள்ளையடித்த சொத்துக்களையும் மீட்டெடுக்க வேண்டும் எனவும் அவர்கள் வலியுறுத்தினர்.

## ஆறு தமிழ்த் ...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

இக்கலந்துரையாடலில் கட்சித் தலைவர்கள் நீதியரசர் விக்னேஸ்வரன், மாவை சேனாதிராஜா, செல்வம் அடைக்கலநாதன், சுரேஷ் பிரேமச்சந்திரன் மற்றும் ஸ்ரீகாந்தா ஆகியோர் கலந்து கொண்டனர். பயணம் காரணமாக சித்தார்த்தனினால் கலந்து கொள்ள முடியவில்லை. எனினும் ஆதரவு தெரிவிக்கப்பட்டது.

ஒருமித்த நிலைப்பாட்டில் உள்ள ஆறு தமிழ்த் தேசியக் கட்சிகளின் தலைவர்கள் 17 ஞாயிறு காலை 11 மணிக்கு தற்போதைய அரசியல் சூழ்நிலை பற்றிய இறுதி நிலைப்பாடு சம்பந்தமாக இணைய வழியில் சந்தித்து உரையாடினர். கடந்த இரு வாரங்களாக தொடர்ச்சியாக தற்போது நாட்டில் ஏற்பட்டிருக்கும் அரசியல் சூழ்நிலை, தமிழ் மக்கள் நிலைப்பாடு , இதை எப்படிக் கையாள்வது என்பன குறித்து இணைய வழியினூடாக பல சந்திப்புகள் நடைபெற்றன.

இறுதியாக 17 ஞாயிறுக் கூட்டத்தில் ஜனாதிபதி வேட்பாளர்கள், வரப்போகும் அரச தரப்பு, போராட்ட அமைப்புகள் ஆகியோரிடம் தமிழ் மக்கள் சார்பில் கோரிக்கை ஒன்றை முன்வைப்பதாக தீர்மானிக்கப்பட்டது. அக்கோரிக்கைள் சம்பந்தமான தயாரிக்கப்பட்ட வரைவும் பரிசீலிக்கப்பட்டது.

18 ஆம் திகதி திங்கள் (இன்று) காலை 11 மணிக்கு மீண்டும் கூடி இக் கோரிக்கை ஆவணத்தை இறுதி செய்வது எனத் தீர்மானிக்கப் பட்டது. இதற்கான சர்வதேச ஆதரவை ஒருங்கமைக்கவும் ஆலோசிக்கப்பட்டுள்ளது.

தமிழ் மக்கள் தமது எதிர்கால அரசியல் இருப்பை தீர்மானிக்க மீண்டும் கிடைத்துள்ள இச்சந்தர்ப்பத்தைத் தமிழர் தரப்பு ஒருமித்த நிலையில் கையாள்வது, எமது மக்களுக்கான உறுதியான முக்கிய மாற்றங்களை ஏற்படுத்த வழி அமைக்கும் என நம்பிக்கை வெளியிடப்பட்டது.

இந்நிலையில் எமது மக்கள் நலன் கருதி தமிழ் தேசிய மக்கள் முன்னணியிடமும் இம்முயற்சியில் இணைந்து கொள்வதற்கான கோரிக்கை முன்வைக்கத் தீர்மானிக்கப்பட்டது.

தமிழ்த் தேசிய பரப்பிலே பயணித்துக் கொண்டிருக்கும் கட்சிகள் ஒருமித்த நிலைப்பாட்டில் தொடர்ச்சியாக முன்னெடுத்துவரும் கலந்துரையாடல்கள் மற்றும் செயல்பாடுகள் வெற்றிகரமாக நடைபெற்றுவருவது அனைவரும் அறிந்ததே. - என்று உள்ளது.

## ரணிலுக்கே...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

பொது ஜன முன்னணி அறிவித்துள் ளது.

அக்கட்சியின் பொதுச்செயலாளரும் நாடாளுமன்ற உறுப்பினருமான சாகர காரியவசம் நேற்று ஊடகங்களிடம் இதனைத் தெரிவித்துள்ளார்.

பதில் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவை ஆதரிக்க வேண்டும் என்பதே கட்சியின் பெரும்பான்மையான உறுப்பினர்களின் கருத்தாக உள்ளது என்றும் அவர் மேலும் குறிப்பிட்டுள்ளார்.

## ரணிலுக்கு ...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

இருக்கின்றன எனவும், வேலை நிறுத்தப் போராட்டங்களும் முன்னெடுக்கப்படும் எனவும் வசந்த முதலிகே மேலும் தெரிவித்தார். தொழிற்சங்க மற்றும் வெகுஜன அமைப்புக்களின் ஒன்றிய பிரதிநிதிகளுடன் நேற்று இடம்பெற்ற விசேட கலந்துரையாடலின் பின்னர் அவர் இத்தகவலை வெளியிட்டார்.

## சிங்கப்பூரை...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

காரணமாகக் கடந்த 13ஆம் திகதி அதிகாலை மாலைதீவுக்குத் தப்பிச் சென்றிருந்த கோட்டாபய ராஜபக்ஷ, பின்னர் அங்கிருந்து மறுநாள் 14ஆம் திகதி மாலை சிங்கப்பூருக்குச் சென்றார். அங்கு அவர் தனது நண்பர் ஒருவருக்குச் சொந்தமான வீட்டில் தங்கியிருக்கின்றார் என்று தெரிவிக்கப்படுகின்றது.

இந்தநிலையில், கோட்டாபய ராஜபக்ஷவை நேற்றுமுன்தினம் சந்தித்த சிங்கப்பூர் அமைச்சர் காசி விஸ்வநாதன் சண்முகம், சிங்கப்பூர் அரசால் இனிப் பாதுகாப்பு அளிக்க முடியாது எனவும், நாட்டை விட்டு 15 நாள்களுக்குள் வெளியேறும்படி கோரிக்கை விடுத்தார் எனவும் தகவல்கள் வெளியாகியுள்ளன.

இதேவேளை, சிங்கப்பூரிலிருந்து இந்தியாவுக்கு வருவதற்கு இலங்கையின் முன்னாள் ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ விடுத்த கோரிக்கையை ஏற்க இந்திய அரசு மறுத்துவிட்டது என இந்திய ஊடகம் ஒன்று செய்தி வெளியிட்டுள்ளது.

## ஓரிரு நாள்களுள்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

ஆவணங்களும் ஏற்கனவே நீதியமைச்சினால் சிறைச்சாலைகள் திணைக்களத்திடம் கையளிக்கப்பட்டுள்ளன எனவும் தெரிவிக்கப்படுகிறது. நாடாளுமன்ற உறுப்பினர்களான ஹரீன் பெர்னாண்டோ மற்றும் மனுஷநாணயக்கார ஆகியோர், பதில் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவிடம் விடுத்த கோரிக்கைக்கு அமைய ரஞ்சன் ராமநாயக்கவிற்கு பொதுமன்னிப்பு வழங்குவதற்கு பதில் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க தீர்மானித்துள்ளார் எனக் கூறப்படுகிறது.

இருப்பினும் ரஞ்சனின் தண்டனை காலம் எதிர்வரும் செப்டெம்பர் மாதத்துடன் நிறைவடையும் நிலையில் அவர் மன அதிருப்தியில் இருக்கிறார் எனவும், பதில் ஜனாதிபதியின் பொது மன்னிப்பை ஏற்று வெளியில் வருவாரா என்ற சந்தேகம் இருப்பதாகவும் சில தகவல்கள் தெரிவிக்கின்றன.

## எரிபொருள்கள்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

★92 ரக பெட்ரோலின் விலை 20 ரூபாவாலும் (புதிய விலை - ரூ 450) -

★95 ரக பெட்ரோலின் விலை 10 ரூபாவாலும் (புதிய விலை - ரூ.540) -

★ டீசலின் விலை 20 ரூபாவாலும் (புதிய விலை - ரூ.440) -

★சுப்பர் டீசலின் விலை 10 ரூபாவாலும் (புதிய விலை - ரூ.510)- நேற்றிரவு முதல் குறைக்கப்பட்டுள்ளன.






# மரண அறிவித்தல்



## அமரர் ந .சிவசோதி

காரைநகரை பிறப்பிடமாகவும் பிரான்ஸை வதிவிடமாகவும் கொண்ட ந .சிவசோதி அன்னார் காலஞ் சென்றவாகளான நடராசா நாகேஸ்வரியின் மகனும் இராசபூபதி பராசமணி தம்பதியின் அன்பு மருமகனும் இதயராணியின் அன்பு கணவரும் ஜீவித், தனுசா, யுகிர்தாவின் அன்புத் தந்தையும் செம்பச்சோதி , அருட்சோதியின் அன்பு சகோதரனும், ரவீந்திரன், புவனேந்திரன், சிறீகாந், சிறீரஞ்சனியின் அன்பு மைத்துனரும் ஆவார் . அன்னாரின் இறுதிக் கிரியை பற்றிய விபரம் பின்னர் அறிவிக்கப்படும் .

**தொடர்புகளுக்கு :**

புவனேந்திரன் : 0033761194666
ரவீந்திரன்: 0764732124
செம்பச்சோதி : 0033641861514

தகவல்
குடும்பத்தினர்.


கிளிநொச்சியில்
ஐஸ்வர்யம்
பெருவிருந்து மண்டபம்
Ishwaryam Banquet Hall
Tel:- 021 228 3701, 076 306 8091
Whatsapp:- 071 7736 4308
No.315, Kandy Road,
Kilinochchi
அன்பான வரவேற்பு
தமிழர் பாரம்பரிய உணவு வகைகள்
இந்தியன் இனிப்புப் பண்டங்கள்
இந்தியன் உணவுவகைகள்
Online booking இற்கு விசேட விலைக்கழிவாக 30% பெற்றுக்கொள்ளலாம்.
சகலவிதமான நிகழ்வுகளும் புதிதாக வடிவமைக்கப்பட்ட அனைத்து வசதிகளுடனும் அழகான விருந்துபசார மண்டபம்
ISHWARYAM BANQUET HALL
BANQUET MEALS HALL
FULL OPTION
MAIN DIHES
Vegitable Fried Rice with Panner & Ghee - 900/=
Chiken Fried Rice with Vegetable - 1100/=
Kothu Rotty With Vegitable in Indian Style
DESSERT
Ice Cream Cup - 60/=
Fruit Salad - 60/=
I ce Cream & Fruit Salad - 100/=
Cream Caramel - 120/=
SPECIAL MENU PACKAGE
BEVERAGES
JUICE 200 ml - 70/=
Milk Drink - 70/=
Cocacola M - 70/=
Pepsi M - 70/=
Swchpees Tin - 250/=
Coca Cola Tin - 250/=

காலைக்கதிர்
Kalaikkathir

# நமது பார்வை

உண்மை - நேர்மை - பக்கம் சாராமை

ஆசிரியபீடம்: 30, கல்லூரி வீதி, யாழ்ப்பாணம் மின்னஞ்சல் - kalaikkathirnews@gmail.com
தொலைபேசி - 021 222 3000 இணையம் - onlinekathir.com

## தமிழ் எம்.பிகளின் கடமை

இலங்கையைப் பொறுத்தவரை இது ஒரு முக்கியமான காலகட்டம் – அது ஒரு பரிமாணத்தில்.

அதேசமயம் பிறிதொரு பரிமாணத்தில் இலங்கைத் தமிழர்களுக்கும் இது ஒரு முக்கியமான காலகட்டம் தான்.

இலங்கை நாட்டின் அரசியல் முறைமையே இப்போது கேள்விக்குள்ளாகி இருக்கின்றது.

தமிழ் மக்கள் தமது எதிர்கால அரசியல் இருப்புத் தொடர்பில் சில தீர்க்கமான தீர்மானங்களை எடுக்க வேண்டிய – எடுக்கக் கூடிய – சந்தர்ப்பத்தை தென்னிலங்கை அரசியல் களேபரம் நமக்கு இப்போது தந்திருக்கின்றது.

இந்த வாய்ப்பைத் தமிழர் தரப்பு ஒருமித்த நிலையில் – ஒரே குரலில் – ஒரே அணியாக – தமது மக்களுக்காக ஒன்றுபட்டுக் கையாள்வது காலத்தின் கட்டாயம்.

யாழ்ப்பாணத்தில் மதப்பெரியார்கள் சுயாதீனமாக ஒன்று கூடி, இதனை ஏற்கனவே வற்புறுத்தி இருந்தார்கள். அதனைக் கவனத்தில் எடுத்து, தமிழ்த் தேசியப் பரப்பிலே அரசியல் கருமமாற்றும் ஆறு கட்சிகள் ஒன்றுபட்டுச் செயற்பட இணங்கிக் காரியமாற்றிக் கொண்டிருக்கின்றமை வரவேற்கத்தக்க விடயம்.

வழமை போல தமிழ்த் தேசிய மக்கள் முன்னணி தனது அதிமேதாவித்தன வாதங்களின் அடிப்படையில் இக்கூட்டுச் செயற்பாட்டை நிராகரித்திருக்கின்றமை தமிழர் தரப்புக்குத் தொடரும் துரதிர்ஷ்டமே.

ஆறு கட்சிகளும் இணையவழியில் முக்கிய கலந்துரையாடலை செய்திருக்கின்றன. தமிழர் தரப்பின் ஏகோபித்த கோரிக்கைகள் விவரத்தை, நாளை மறுதினம் நாடாளுமன்றத்தில் நடைபெறவிருக்கும் ஜனாதிபதி தேர்தலில் போட்டியிடுகின்ற வேட்பாளர்களுக்கும், காலிமுகத்திடல் போராட்டக் குழுவினருக்கும் சமர்ப்பிக்கத் தீர்மானித்திருப்பது சரியான நடவடிக்கை.

தமிழர்களின் கோரிக்கைகள் தொடர்பில் இத்தரப்பினர் எடுக்கக்கூடிய முடிவுகள், பதில்களின் அடிப்படையில் ஜனாதிபதி தேர்தலை எதிர்கொள்வது என்று தமிழ்க் கட்சிகள் தீர்மானித்து செயல்படுகின்றமையும் பொருத்தமானதுதான்.

இதற்கிடையில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்றக் குழு, இன்று மாலை 5 மணிக்கு கொழும்பில் கூட்டமைப்பின் தலைவர் சம்பந்தனின் இல்லத்தில் கூடி, மேற்படி ஆறு தமிழ் கட்சிகளும் சமர்ப்பிக்கக் கூடிய ஆவணத்தை பரிசீலிக்க இருப்பதாகவும் தெரிகின்றது.

நாடாளுமன்றத்தில் நடைபெறப் போகும் ஜனாதிபதி தேர்தல் என்பது மிகவும் முக்கியமான விடயம். தமிழ் மக்கள் தங்களுக்கு வழங்கிய ஆணையை, அந்தத் தமிழ் மக்களின் பிரதிநிதிகளான நாடாளுமன்ற உறுப்பினர்கள் இந்தத் தேர்தலில் தமிழ் மக்கள் சார்பில் பிரயோகிக்க உள்ளார்கள். ஆகவே, இந்தத் தேர்தலை ஒட்டிய அவர்களின் – அந்த நாடாளுமன்ற உறுப்பினர்களின் – தீர்மானங்கள், தாங்கள் பிரதிநிதித்துவப்படுத்தும் மக்களின் கருத்தியலை பிரதிபலிப்பதாக நிச்சயம் இருக்க வேண்டும். கொழும்பில் அரசியல் செய்யும் தரப்புகளின் விருப்பு வெறுப்புக்கு – அவர்களின் நீதி நியாயங்களுக்கு – அமைவானதாக அது இருக்க வேண்டியதில்லை.

தாங்கள் யாரை பிரதிநிதித்துவப்படுத்துகின்றார்களோ அந்த மக்களின் – தமிழ் மக்களின் – கருத்தைப் பிரதிபலிப்பாக மட்டுமே நாடாளுமன்றத்தில் நடைபெறும் ஜனாதிபதி தேர்தலில் தமிழ் எம்.பிக்கள் வாக்களிக்க வேண்டும் என்பதை சம்பந்தப்பட்ட மக்கள் பிரதிகளுக்கு நினைவூட்டி வைக்கிறோம்.

குறைந்தபட்சம் கடந்த இரண்டரை வருட காலத்தில் அனுபவித்து விட்ட நெருக்கடிகளுக்கான பிராயச்சித்தம் செய்யும் நடவடிக்கைகளை அடுத்த இரண்டேகால் வருடத்தில் தமிழர்கள் எதிர்கொள்ள கூடியதான மாற்றத்திற்கு இப்போதைய அரசியலைத் திசை திருப்புவது தமிழ்ப் பிரதிநிதிகளின் கடமையாகும்.

# ரணில் விக்கிரமசிங்க 140 வாக்குகள் பெறுவார்

## ஐக்கிய தேசியக் கட்சி நம்பிக்கை



புதிய ஜனாதிபதியை தெரிவு செய்வதற்காக நாடாளுமன்றில் இடம்பெறும் வாக்கெடுப்பில் ரணில் விக்கிரமசிங்க 140 வாக்குகளைப் பெற்றுக்கொள்வார் என ஐக்கிய தேசியக் கட்சி நம்பிக்கை வெளியிட்டுள்ளது.

ஊடக சந்திப்பில் கலந்துகொண்டு கருத்து தெரிவிக்கும்போதே அந்தக் கட்சியின் தவிசாளர் வஜிர அபேவர்தன இதனைத் தெரிவித்தார்.

பொருளாதார மந்தநிலையில் உள்ள நாட்டுக்குத் தேவையான கொள்கைகள் தொடர்பாக ஏனைய அரசியல் கட்சிகளின் தலைவர்களுடன் பேச்சு நடத்தியதாக அவர் தெரிவித்தார்.


இந்நிலையில் ரணில் விக்கிரமசிங்க கொண்டுள்ள அரசியல் அனுபவத்துக்காக அவருக்கு நாடாளுமன்றில் பெரும்பான்மை கிடைக்கும் என நம்புவதாக வஜிர அபேவர்தன கூறினார்.

அவ்வாறு பெரும்பான்மை அங்கீகாரத்துடன் அடுத்த ஜனாதிபதியாக ஐக்கிய தேசியக் கட்சியின் தலைவர் தெரிவு செய்யப்பட்டால் அது அனைவருக்கும் நன்மை பயக்கும் என அவர் தெரிவித்தார்.

50 வருட கால அரசியல் அனுபவம் கொண்ட ரணில் விக்ரமசிங்கவாலேயே நாட்டை முன்னோக்கி கொண்டு செல்ல முடியும் என வஜிர அபேவர்தன குறிப்பிட்டார்.

# தமிழ்ச் சமூகத்தின் கருத்துக்களுக்கும் செவிசாய்க்கும் தலைவருக்கே ஆதரவு

## விக்கி திட்டவட்டம்



தமிழ் சமூகத்தின் கருத்துக்களுக்கு செவிசாய்க்கும் தலைவருக்கே ஆதரவு என நாடாளுமன்ற உறுப்பினர் சி.வி.விக்னேஸ்வரன் தெரிவித்துள்ளார்.

எதிர்வரும் ஜூலை மாதம் 20 ஆம் திகதி நடைபெறவுள்ள புதிய ஜனாதிபதியைத் தெரிவு செய்யும் வாக்கெடுப்பு தொடர்பாகக் கருத்துத் தெரிவிக்கும்போதே அவர் இவ்வாறு கூறினார்.

சுதந்திரத்தின் பின்னரும் தமிழ் மக்கள் பல பிரச்சினைகளைத் தொடர்ந்தும் எதிர்நோக்கிவருகின்றனர்எனவும்சி.வி.விக்னேஸ்வரன் சுட்டிக்காட்டியுள்ளார்.

30 வருடங்களுக்கு மேலாக நிலவும் இந்தப் பிரச்சினைகளுக்கு மக்கள் போராட்டத்தின் பின்னராவது தீர்வு காணப்பட வேண்டும் எனவும் அவர் மேலும் தெரிவித்தார்.

ஆகவே, தாம் புதிய ஜனாதிபதியைத் தெரிவு செய்யும் வாக்கெடுப்பில் பக்கச்சார்பற்ற முறையில் செயற்படவுள்ளதாக சி.வி. விக்னேஸ்வரன் குறிப்பிட்டார்.

எவ்வாறாயினும் தமிழ் சமூகம் எதிர்நோக்கும் பிரச்சினைக்குத் தீர்வுகாண பாடுபடும் ஜனாதிபதி வேட்பாளருக்கு ஆதரவாக வாக்களிப்பேன் என்றும் சி.வி.விக்னேஸ்வரன் கூறியுள்ளார்.

# அபிவிருத்தியடைந்து வரும் நாடுகளுக்கு வலுவான பொருளாதார அமைப்பு தேவை!

## சர்வதேச நாணய நிதியம் அறிவுறுத்து

வலுவான பொருளாதார அமைப்பு இல்லாத அபிவிருத்தியடைந்து வரும் நாடுகளின் பொருளாதார வீழ்ச்சிக்கு இலங்கை சிறந்த உதாரணம் என சர்வதேச நாணய நிதியம் தெரிவித்துள்ளது.

உலகப் பொருளாதார நிலை காரணமாக அபிவிருத்தியடைந்துவரும்நாடுகளின்பொருளாதாரம் வீழ்ச்சியடைந்து வருவதாக அதன் முகாமைத்துவப் பணிப்பாளர் கிறிஸ்டலினா ஜோர்ஜியாவா சுட்டிக்காட்டியுள்ளார்.

உக்ரைன் போருடன், உலக உணவு மற்றும் பொருள்களின் விலைகள் கடுமையான அழுத்தத்தில் இருப்பதாகவும், நிதி நிலைமைகள் எதிர்பார்த்ததை விட இறுக்கமாகி வருவதாகவும் அவர் குறிப்பிட்டுள்ளர். இதேவேளை அபிவிருத்தியடைந்து வரும் நாடுகளூக்கு வலுவான கொள்கை தேவை எனவும் அவர் தெரிவித்தார்.

## தமிழர் அபிலாஷை...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

நாட்டின் அரசியல் கலாசாரத்தை மாற்றுவதற்கான சந்தர்ப்பம் ஏற்பட்டுள்ளது. இதைப் புறந்தள்ளிச்செயற்படுவதுமுறையானதல்ல. மீண்டும் பழைய பாதையிலேயே போகக் கூடாது என முன்னிலை சோலிசக் கட்சியின் பொதுச்செயலாளர் குமார் குணரத்தினம் கூறுகின்றார். இதுவே எமது கொள்கையாகவும் இருக்கின்றது. இதனாலேயே நாம் எப்போதும்ராஜபக்ஷஅரசியல்கலாசாரத்தை எதிர்த்து வந்துள்ளோம். ஆனால், இந்த உத்தேச புதிய அரசியல் கலாசாரம், தமிழர் அபிலாஷைகளையும் வெறும் ஒருசில கோங்களுக்கு அப்பால் சென்று, கோட்பாடுகளாக உள்வாங்க வேண்டும். இதைப் போராட்டக்காரர்கள் புரிந்துகொள்ள வேண்டும். இதற்கு குமார் குணரத்தினத்தின் முன்னிலை சோலிசக் கட்சியும், ஏனைய கட்சிகளுடன் இணைந்து ஒத்துழைக்க வேண்டும்.

அரசியல் சட்டங்களுக்கு அப்பால் மக்கள் சக்தி உருவாகியுள்ளது. அந்தச் சக்தியின் எதிர்பார்ப்புக்களை நிறைவேற்ற வேண்டியது அதிகாரத்தில் உள்ளவர்களின் கடமையாகின்றது. அது உண்மை. ஆனால், இதே விதமான சட்டத்துக்கு அப்பால் சென்றுதான், கடந்த காலங்களில் தமிழர்கள் ஒடுக்குமுறையை சந்தித்தார்கள். இப்போதும் சந்திக்கிறார்கள்.

ஆகவே, மக்கள் சக்தியை அடிப்படையாகக் கொண்ட மக்கள் சபைகள் உருவாக்கப்பட்டும். புதிய அரசமைப்பு உருவாக்கப்பட்டு தீர்வுகள் வரட்டும். நாமும் அவற்றை ஆவலுடன் எதிர்பார்க்கின்றோம். ஆனால், சட்டங்கள் வரமுன் அவற்றுக்கு அப்பால் முதலில் கோட்பாடுகள் வர வேண்டும். அவையே பின்னர் அரசமைப்பில் இடம்பெறும்.

இப்போது போராட்டக்காரர்கள் மத்தியில், தமிழர்களின் தேசிய அபிலாஷைகள் தொடர்பில், கோட்பாடுகளை நாம் காணவில்லை. எமக்கு வழங்கப்பட்டுள்ள பல்வேறு போராட்டக்கார அமைப்புகளின் ஆவணங்களில் ஒருசில மென்மையான கோஷங்களைத் தான் நாம் காண்கின்றோம்.

ஆகவே, தமிழர் அபிலாஷைகளையும் கோஷங்களாக மட்டும் இல்லாமல், கோட்பாடுகளாக உள்வாங்க வேண்டும். இதற்கு மக்கள் விடுதலை முன்னணி, முன்னிலை சோலிசக் கட்சி ஆகிய அமைப்புகள் ஆவன செய்ய வேண்டும் – என்றார்.

# இந்தியாவின் பொருளாதாரத்தை மேம்படுத்த மோடியின் திட்டங்கள்




2040 ஆம் ஆண்டிற்குள் 20 டிரில்லியன் பொருளாதாரத்தை அடைவது என்ற இந்தியாவின் இலக்கை எட்டுவதற்கு உள்கட்டமைப்பு மேம்பாடு மிகவும் முக்கியமானதாக உள்ளது.

பிரதம மந்திரி நரேந்திர மோடியின் 'அமிர்த கால்' என அறிவிக்கப்பட்ட தொடர் கட்டமைப்பு சீர்திருத்தங்கள், உள்கட்டமைப்பு மேம்பாட்டின் பின்னணியில் விரைவான பொருளாதார வளர்ச்சிக்கான அடித்தளத்தை அமைத்துள்ளது.

கடந்த ஆண்டு, ஒக்டோபர் 2021 இல் 'பிரதமரின் கதிசக்தி தேசிய மாஸ்டர் பிளான்' (NMP) தொடங்குவதன் மூலம் இதற்கான ஒரு படி முன்னெடுக்கப்பட்டது.

ஒருங்கிணைந்த திட்டமிடல் மற்றும் திட்டங்களை செயல்படுத்துவதற்காக 16 அமைச்சகங்களை ஒன்றிணைக்க டிஜிற்றல் தளத்துடன் 100 லட்சம் கோடி ரூபா மெகா திட்டம் தொடங்கப்பட்டது.

எரிசக்தி உள்கட்டமைப்பைப் பொறுத்தவரை, பிரதமர் மோடி 2030 ஆம் ஆண்டுக்குள் 500 ஜிகாவாட் நிறுவப்பட்ட புதைபடிவ எரிபொருள் அடிப்படையிலான மின்சாரத் திறனை லட்சிய இலக்காக நிர்ணயித்து உலகளாவிய தலைமையை நிரூபித்துள்ளார். பணக்கார மண்டலத்திலிருந்து நுகர்வு மையங்களுக்கு மின்சாரத்தை வெளியேற்றும் பரிமாற்ற நெட்வொர்க், இந்த டிரான்ஸ்மின் திட்டங்கள், பாரம்பரியமாக உருவாக்க 3 – 4 ஆண்டுகள் ஆகும், திட்ட காலக்கெடுவை




பொறுத்து அதனை 18 மாத காலக்கெடுவில் முடிக்க அவை முடுக்கி விடப்பட்டுள்ளன.

'பிரதமரின் கதிசக்தி நஷனல் மாஸ்டர் பிளான்'




என்ற கட்டமைப்பு, சில நேரங்களில் மூன்றில் இரண்டு பங்கு நேரத்தை பாதை திட்டமிடல் மற்றும் டிரான்ஸ்மிஷன் திட்ட அபிவிருத்தியாளர்கள் மூலம் தேவையான அனுமதிகள் மற்றும் ஒப்புதல்களை பெறுவதில் ஆற்றல் பரிமாற்ற திட்டங்களுக்கு இடைவழிகாட்டியாக இருக்கும்.

ரயில்வே பாதை இணைப்புகள், தரிப்பிகள், நெடுஞ்சாலைகள் மற்றும் கட்டுமானத்தின் கீழ் உள்ள பிற உள்கட்டமைப்பு திட்டங்களின் துல்லியமான இருப்பிடத்தை தேவையான சமயங்களில் வழங்குவதன் மூலம் கட்டமைப்பு அபிவிருத்தியாளர்களுக்கு (டெவலப்பர்களுக்கு) மிகவும் உகந்த வழியை டிஜிற்றல் முறையில் அடையாளம் காண இந்த 'பிரதமரின் கதி சக்தி நஷனல் மாஸ்டர் பிளான்' என்ற கட்டமைப்பு உதவும்.

இது வளர்ச்சியில் கால தாமதங்களைத் தவிர்த்து மாதங்களைச் சேமிப்பது மட்டுமல்லாமல், முதல் முறையாக சரியான பாதையை உறுதி செய்வதன் மூலம் செலவுத் திறனையும் மேம்படுத்தும். ஒற்றைச் சாளர அனுமதியின் ஒருங்கிணைப்பு, திட்டப்பணியை விரைவுபடுத்துவதற்கும், உலக முதலீட்டாளர்களை ஈர்க்கும் வகையில் இந்தத் துறையை உருவாக்குவதற்கும் ஒரே மிகப்பெரிய உதவியாக இருக்கும். உலகில் சில நாடுகளால் மட்டுமே இதை முறியடிக்க முடிந்தது.

ராஜஸ்தான், குஜராத், மத்தியப் பிரதேசம், மகாராஷ்டிரா, கர்நாடகா மற்றும் தமிழ்நாடு ஆகிய 6 புதுப்பிக்கத்தக்க மாநிலங்களில் இதுபோன்ற ஒன்பது உயர் தாக்க பரிமாற்ற திட்டங்களை மின் அமைச்சகம் ஏற்கனவே கண்டறிந்துள்ளது.

நெருக்கமான கண்காணிப்பு மற்றும் விரைவான ஒப்புதல்கள் வழங்கலுக்காக இத்திட்டங்களின் தேவையான விவரங்கள் 'பிரதமரின் கதி சக்தி தேசிய மாஸ்டர் பிளான்' கட்டமைப்பில் வரைபடமாக்கப்பட்டுள்ளன.

மாநிலங்களுக்கு இடையேயான மின் பரிமாற்ற வலையமைப்பின் தனி அடுக்கு உருவாக்கப்பட்டுள்ளது. கணிசமான பெரும்பான்மையான கட்டுமானங்களில் உள்ள டிரான்ஸ்மின் திட்டங்களும் ஒருங்கிணைக்கப்பட்டுள்ளன, மீதமுள்ளவை அந்தந்தக் கட்டுமான அபிவிருத்தியாளர்களால் பாதைக் கணக்கெடுப்பை இறுதி செய்த பிறகு ஒருங்கிணைக்கப்படும்.

உகந்த திட்டமிடல் செயல்முறைகளில் கவனம் செலுத்துவது, அடுத்த 4 – 5 ஆண்டுகளுக்கு பசுமை ஆற்றல் இலக்குகளை அடைவதற்காக உருவாக்கப்பட வேண்டிய பரிமாற்ற உள்கட்டமைப்பு திட்டங்களை தெளிவாக அடையாளம் காண வழிவகுத்திருக்கின்றது.

இன்று, உள்கட்டமைப்புத் துறையானது, மூலதனம் கிடைப்பதில் மாற்றங்கள், சமூக/சுற்றுச்சூழல் முன்னுரிமைகள் மற்றும் விரைவான நகரமயமாக்கல் உள்ளிட்ட உலகளாவிய இடையூறுகளின் ஊடுருவல் புள்ளியில் அமர்ந்திருக்கிறது.

தொற்றுநோய்க்கு பிந்தைய உலகில் விரைவான பொருளாதார மீட்சிக்கு உள்கட்டமைப்பு மேம்பாட்டில் அதிக கவனம் தேவை. அடுத்த 25 ஆண்டுகளில் இந்தியாவிற்கான பிரதமரின் தொலைநோக்கு எதிர்காலம் மற்றும் நவீன உள்கட்டமைப்பில் பாரிய முதலீடுகள் உள்ளடக்கப்பட்டுள்ளன. குடிமக்களின் வாழ்க்கையை மேம்படுத்துதல், அனைவருக்கும் 24X7 தரமான மின்சாரத்தை உறுதி செய்தல் மற்றும் உயர் தொழில்நுட்பத்தை தழுவுதல் போன்ற நோக்கத்துடன் இந்திய தேசம் முன்னேறுவதற்கான பாதையை இது அமைத்துள்ளது.

இந்த பயணத்தில், துல்லியமான தரவு கிடைப்பது மற்றும் பல்வேறு அமைச்சகங்கள் மற்றும் அரசு அமைப்புகளுக்கு இடையே மேம்படுத்தப்பட்ட ஒருங்கிணைப்புடன், பிரதமரின் கதி சக்தி தேசிய மாஸ்டர் பிளான் உண்மையிலேயே திட்ட உருவாக்குநர்களுக்கு உலகத் தரம் வாய்ந்த சொத்துக்களை வழங்கவும், உலகின் மிகப்பெரிய பொருளாதாரங்களில் இந்தியா 100 உலக வணிக மூலதனமாக மாற வேண்டும் என்ற கனவை நனவாக்கவும் உதவும்.



# கோட்டாவுக்கு எந்த நாடும் தஞ்சம் வழங்கக் கூடாது!

## உலகத் தமிழர் பாதுகாப்பு செயலகம் வலியுறுத்து

மஹிந்தராஜபக்ஷ, கோட்டாபய ராஜபக்ஷ உள்ளிட்ட தமிழின படுகொலையாளர்களை இனி எந்த நாட்டிலும் தஞ்சம் புக அனுமதிக்கக் கூடாது என உலகத் தமிழர் பாதுகாப்பு செயலகம் வெளியிட்ட ஓர் அறிக்கையில் வேண்டுகோள் விடுத்துள்ளது.

நாட்டை நிர்வகிக்கத் தெரியாமல், சொந்த இன மக்களின் கிளர்ச்சியில் ஓட ஓட விரட்டியடிக்கப்பட்ட, போர் குற்றவாளிகளான இலங்கை முன்னாள் அதிபர்கள் மஹிந்த ராஜபக்ஷ, கோட்டாபய ராஜபக்ஷ உள்ளிட்ட இவர்களின் குடும்பத்தார் மற்றும் தமிழின அழிப்புக்குக் காரணமான எவரையும் எந்த நாட்டிலும் தஞ்சம் புக விடாமல் விரட்டியடிக்க வேண்டுமெனப் புலம்பெயர்ந்த தமிழர்களிடம் உலகத் தமிழர் பாதுகாப்பு செயலகம் வேண்டுகோள் விடுக்கிறது என அதன் ஒருங்கிணைப்பாளர் பாலமுருகன் வீரசாமி தெரிவித்தார்.

சிங்களப் பௌத்த இனவெறி அரசை வழிநடத்தி, இலட்சக்கணக்கான எமது தொப்புள் கொடி உறவுகளை இனப்படுகொலை செய்து, ஆயிரக்கணக்கில் எமது பெண்களைப் பாலியல் துன்புறுத்தலுடன் படுகொலை செய்து, போர் அறத்தையும் மீறி உலகின் தடை செய்யப்பட்ட அணு ஆயுதங்களைக் கொண்டு, எமது பல நூற்றுக்கும் அதிகமான பிஞ்சு குழந்தைகளைக் கரிக்கட்டைகளாக எரித்து, இன்றும் பல ஆயிரம் இளைஞர்கள் காணாமல் ஆக்கப்பட்டு இன்னும் எண்ணற்ற ஈவிரக்கமற்ற அடக்குமுறைகளை எமது இனத்தின் மீது கட்டவிழ்த்து விட்ட இவர்களை உலகத் தமிழினம் ஒரு போதும் மன்னிக்காது.

தன்னாட்சி உரிமைக்காகப் போராடிய தமிழீழ இராணுவமான விடுதலைப் புலிகள் அமைப்பை, இந்தியா உள்ளிட்ட வல்லாதிக்க அரசுகளின் துணையோடு நயவஞ்சகத்தால் வீழ்த்தி, எந்த மக்களால் போற்றப்பட்டார்களோ, அவர்களே வெறுக்கும் வண்ணம் அதிகப்படியான கடன்கள், ஊழல்கள், நாட்டை நிர்வகிக்க முடியாத தவறான கொள்கைகள் என அடிப்படை தேவைக்கு நடுரோட்டுக்கு வந்து போராடும், அதே மக்களின் அடக்க முடியாத கிளர்ச்சிக்கு அஞ்சி தலைமறைவாகி நாட்டை விட்டே ஓடுகிறார்கள்.

‘தற்போது சிங்கள மக்களுக்குப் புரிந்திருக்கும். சிங்கள அரசுடன் 21 நாடுகள் ஒன்று சேர்ந்து எதிர்த்த போது, தமிழீழ விடுதலைக்காக தாயகத்தில் இருந்தே எதிர்த்த எம் தலைவன் எங்கே.. மக்கள் புரட்சியில் உயிருக்கு அஞ்சி நாட்டை விட்டு ஓடிய இந்தத் தரு தலைகள் எங்கே என..,’ என்று பாலமுருகன் தெரிவித்தார்.

அனைத்துலக நீதிமன்றத்தில் நிறுத்தப்பட வேண்டிய, கொடுங்கோலன் கோட்டாபய ராஜபக்ஷ தற்போது சிங்கப்பூரில் அடைக்கலமாகி இருக்கிறார் என்ற செய்தி வருத்தத்துக்குரியதாக இருக்கிறது. சிங்கப்பூர் தமிழர்கள் இந்தப் போர் குற்றவாளிக்கு எதிராக விரைந்து நடவடிக்கை எடுக்க வேண்டும்.

இனி புலம்பெயர்ந்த தமிழர்கள் வாழும் எந்த நாட்டிலும் இனப்படுகொலையாளர்கள் கால் வைக்க முடியாத நிலையை உருவாக்க வேண்டுமென உலகத் தமிழர் பாதுகாப்பு செயலகம் உலகத் தமிழர்களுக்கு வேண்டுகோளை விடுக்கிறது என அவர் மேலும் தெரிவித்தார்.

# இலவசக்கல்வி, சுகாதார அரச உதவிகளை குறைக்க சர்வதேச நாணய நிதியம் நிபந்தனை விதிக்கலாம்

## பாலித கோஹன தெரிவிப்பு



இலங்கையின் கடன்மறுசீரமைப்பு நடவடிக்கைகளில் ஆசிய அபிவிருத்தி வங்கியும் உலகவங்கியும் அதிகளவு பங்களிப்பை வழங்கவேண்டும்என சீனாவிற்கான இலங்கைத் தூதுவர் பாலித கோஹன தெரிவித்துள்ளார்.

கடன்நிவாரணம் தொடர்பில் இலங்கையும் சர்வதேச நாணயநிதியம் இன்னமும் ஆரம்பகட்ட இணக்கப்பாட்டுக்கு வரவில்லை இலங்கைக்கு அதிகளவுகடன்வழங்கியுள்ளஆசியஅபிவிருத்தி வங்கியும் உலகவங்கியும் கடன்மறுசீரமைப்பு நடவடிக்கைளை துரிதப்படுத்தக்கூடிய திட்டமொன்றை முன்வைக்கவேண்டும் என கோரப்படுகின்றன என சீனாவிற்கான இலங்கை தூதுவர் பாலித கோஹன குளோபல் டைம்சிற்கு வழங்கிய பிரத்தியேக பேட்டியில் தெரிவித்துள்ளார்.

அதிகரிக்கும் ஆர்ப்பாட்டங்கள் அத்தியாவசியப் பொருள்கள் பற்றாக்குறை அவசரகாலநிலைமை பிரகடனம் போன்ற தொடரும் நிலைமைகளுக்கு மத்தியில் கடனில் சிக்கியுள்ள நாட்டுக்கு அதன் சகாக்கள் மேலும் உதவிகளை வழங்கவேண்டும் எனவும் அவர் தெரிவித்துள்ளார்.

கடந்த மாத இறுதியில் சர்வதேச நாணயநிதியம் இலங்கைக்கு விஜயம் மேற்கொண்டது. எங்களுக்கு கிடைத்த அறிக்கைகளின் படி பேச்சுகள் திருப்திகரமானமுறையில் இடம்பெற்றுள்ளன. நாங்கள் லண்டனில் சட்டஆலோசகர்களை நியமித்துள்ளோம். கடன் மறுசீரமைப்பு தொடர்பாகப் புரிந்து கொள்ளக்கூடிய மேற்குலக நிபுணர்களையும் நாங்கள் நியமித்துள்ளோம் என பாலித கோஹன தெரிவித்துள்ளார்.

ஆனால் சர்வதேச நாணயநிதியத்துடனான பேச்சுகள் ஆரம்பகட்டத்திலேயே உள்ளன என்பதை சுட்டிக்காட்டியுள்ள அவர் புதிய அரசாங்கம் பதவியேற்றதும் சர்வதேச நாணயநிதியத்துடனான பேச்சுக்களுக்கான புதிய ஏற்பாடுகள் இடம்பெறும் எனவும் தெரிவித்துள்ளார்.

சர்வதேச நாணயநிதியத்தின் நிபந்தனைகள் விதிமுறைகள் பாரமானதாகயிருக்காது என அவர் நம்பிக்கை வெளியிட்டுள்ளார்.

சர்வதேச நாணயநிதியம் வரும் ஒவ்வொரு முறையில் எங்களை இறுக்கிகொள்ள வேண்டியது - செலவுகளை கட்டுப்படுத்த-குறைக்கவேண்டியது தவிர்க்க முடியாதது எனவும் குறிப்பிட்டுள்ள பாலித கோஹன ஆனால் சில சந்தர்ப்பங்களில் நாங்கள் இறுதி கட்டத்தில் இருப்பதால் இது கடினமானது எனவும் தெரிவித்துள்ளார்.

சர்வதேச நாணயநிதியம் சுகாதார துறைக்கு அரசாங்கம் வழங்கும் நிதியை (இலவச சுகாதார சேவை) குறைக்குமாறு வேண்டுகோள் விடுக்கலாம் என நாங்கள் கவலை கொண்டுள்ளோம். அதேபோன்று இலவசக்கல்வி தொடர்பாகவும் சர்வதேச நாணயநிதியம் பரிந்துரைகளை முன்வைக்கலாம் இது மேலும் அமைதியின்மையை ஏற்படுத்தலாம்.

உலகவங்கி ஆசிய அபிவிருத்தி வங்கி போன்ற சர்வதேச நிதியமைப்புகளே இலங்கைக்கு அதிகளவு நிதியை வழங்கியுள்ளன. வோல்ஸ்ரீட் போன்றவையும் குறிப்பிடத்தக்க முதலீடுகளை செய்துள்ளன. இந்த நிதியமைப்புகள் அதிகளவு பங்களிப்பை வழங்க வேண்டும் என வேண்டுகோள் விடுத்துள்ள அவர் இலங்கை எதிர்கொண்டுள்ள நெருக்கடியிலிருந்து மீள்வதற்கு இருதரப்பு நிதி உதவி வழங்குபவர்களும் உதவிகளை வழங்குவார்கள் என எதிர்பார்ப்பு வெளியிட்டுள்ளார்.

இலங்கையில் ரணில்விக்கிரமசிங்கவிற்கு எதிராக ஆர்ப்பாட்டங்கள் இன்னமும் தொடர்கின்றன எனத் தெரிவித்துள்ள பாலிதகோஹன பதில் ஜனாதிபதி பதவியில் நீண்டகாலம் நீடிப்பாரா என்பது தெரியவில்லை எனவும் குறிப்பிட்டுள்ளார்.

இதுமிகவும் திருப்தியற்ற நிலை ஏனென்றால் நாட்டின் தலைமைத்துவம் தொடர்பாகத் திடீரென கேள்வி எழுந்துள்ளது. இதன் காரணமாக அரசமைப்பு ஏற்பாடுகளை பின்பற்றவேண்டும். குறிப்பிட்ட காலத்துக்குள் புதிய ஜனாதிபதியைத் தெரிவு செய்வதற்கான தேர்தல் இடம்பெறவேண்டும் எனவும் அவர் தெரிவித்துள்ளார்.

எந்த அரசாங்கம் பதவியேற்றாலும் அது சீனாவுடன் சிறந்த உறவைப் பேணும் சீனா இலங்கையின் முக்கிய வர்த்தக சகா முதலீட்டாளர் இரு நாடுகளுக்கும் இடையில் மூலோபாய உறவுகள் உள்ளன தேர்தலிற்குப் பின்னர் பதவியேற்கும் எந்த அரசாங்கமும் சீனாவின் நம்பிக்கையையும் சீன மக்களின் நல்லெண்ணத்தையும் பெறும் என பாலித கோஹன தெரிவித்துள்ளார்.

# ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுனவினர் சஜித்துக்கே வாக்களிக்க வேண்டும்

## ஹர்ஷன ராஜகருணா கோரிக்கை



பெருமளவான மக்களின் வாக்குகளைப்பெற்ற ஜனாதிபதி நாட்டைவிட்டுச் சென்றதன் பின்னர், அடுத்தகட்டமாக அதிகளவான வாக்குகளுடன் இரண்டாம் நிலையிலுள்ள தெரிவு எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸ ஆவார்.

எனவே அவரைவிடுத்து மக்களாணை இல்லாத ரணில் விக்கிரமசிங்கவை ஜனாதிபதியாக்குவதற்கு ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுனவினர் வாக்களிப்பார்களேயானால் அது நாட்டு மக்களின் நலனை முன்னிறுத்திய தீர்மானம் அல்ல என்பதைச் சுட்டிக்காட்ட விரும்புவதாக ஐக்கிய மக்கள் சக்தியின் நாடாளுமன்ற உறுப்பினர் ஹர்ஷன ராஜகருணா தெரிவித்துள்ளார்.

கொழும்பிலுள்ள எதிர்க்கட்சித்தலைவர் அலுவலகத்தில் ஏற்பாடு செய்யப்பட்டிருந்த ஊடகவியலாளர் சந்திப்பில் கலந்துகொண்டு கருத்து வெளியிடுகையிலேயே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அங்கு அவர் மேலும் கூறியவை வருமாறு –

பெருமளவான மக்களின் வாக்குகளைப்பெற்ற ஜனாதிபதி நாட்டைவிட்டுச் சென்றதன் பின்னர், அடுத்தகட்டமாக அதிகளவான வாக்குகளுடன் இரண்டாம் நிலையிலுள்ள தெரிவு எதிர்க்கட்சித்தலைவர் சஜித் பிரேமதாஸ ஆவார்.

அதன்படி அடுத்த ஜனாதிபதியைத் தெரிவுசெய்வதற்கான நாடாளுமன்ற வாக்கெடுப்பு எதிர்வரும் 20 ஆம் திகதி நடைபெறவுள்ள நிலையில், எமது தரப்பில் பொதுச்செயலாளர் ரஞ்சித் மத்தும பண்டாரவால் அடுத்த ஜனாதிபதியாக சஜித் பிரேமதாஸ முன்மொழியப்பட்டதுடன், அந்த யோசனை பீல்ட் மார்ஷல் சரத்பொன்சேகாவால் வழிமொழியப்பட்டது.

எனவே எதிர்வரும் 20 ஆம் திகதி நடைபெறவுள்ள ஜனாதிபதி தெரிவிற்கான வாக்கெடுப்பின்போது ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுனவினர் ரணில் விக்கிரமசிங்கவிற்கு வாக்களிப்பதற்குத் தீர்மானிப்பார்களேயானால், அது நாட்டுமக்களின் நலனை முன்னிறுத்தி மேற்கொள்ளப்படக்கூடிய தீர்மானம் அல்ல.

மாறாக அது அவர்கள் தம்மைப் பாதுகாத்துக்கொள்வதற்கான மேற்கொள்ளும் தீர்மானமாகவே இருக்கும். தனியொரு தேசிய பட்டியல் ஆசனத்தின் மூலம் நாடாளுமன்றத்துக்குள் பிரவேசித்த ரணில் விக்கிரமசிங்கவிற்கு இருக்கும் மக்களாணை என்ன?

அண்மையில் நாட்டுமக்களால் ஆரம்பிக்கப்பட்ட போராட்டத்தின் அடிப்படைக்கோஷம் ‘கோட்டா – ரணில் அரசாங்கம் வீட்டிற்குச் செல்லவேண்டும்’ என்பதாகவே காணப்பட்டது.

ஆகவே, எதிர்வரும் 20 ஆம் திகதி புதிய ஜனாதிபதியைத் தெரிவுசெய்வதற்கு தமது வாக்குகளைப் பயன்படுத்தப்போகின்ற அனைத்து நாடாளுமன்ற உறுப்பினர்களும் மக்களின் நலனை இலக்காகக்கொண்டு, அவர்கள் ஏற்றுக்கொள்ளக்கூடிய ஒரு நபருக்கு வாக்களிக்கவேண்டியது அவசியமாகும்.

அதன்படி ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுன தவிர்ந்த ஏனைய அனைத்துக்கட்சிகளும் சஜித் பிரேமதாஸவிற்கு வாக்களிப்பதற்குத் தயாராக இருக்கின்றன என்பதைச் சுட்டிக்காட்ட விரும்புகின்றேன். – என்றார்.

# எவ்வாறு ரணிலை நீங்கள் ஆதரிப்பீர்கள்? சாகரவிடம் விளக்கம் கோரி பீரிஸ் கடிதம்



புதிய ஜனாதிபதி பதவிக்கான நாடாளுமன்ற தேர்தலில் பதில் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவிற்கு ஆதரவு வழங்க பொதுஜன பெரமுன தீர்மானித்துள்ளதாக ஊடகங்களில் வெளியான செய்தியை கண்டு ஆச்சரியமடைந்தேன்.

இந்த தீர்மானம் தொடர்பில் தெரிந்துகொள்ளும் உரிமை எனக்குண்டு என குறிப்பிட்டு ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுனவின் தவிசாளர் பேராசிரியர் ஜி.எல்,பீரிஸ் பொதுஜன பெரமுனவின் பொதுச்செயலாளர் சாகர காரியவசத்திற்கு ஆறு கேள்விகளை தொடுத்து கடிதம் அனுப்பி வைத்துள்ளார்.

பதவி வெற்றிடமாகியுள்ள ஜனாதிபதி பதவிக்கு பதில் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவை வேட்பாளராக்குவதற்கும், அவருக்கு ஆதரவு வழங்குவதற்கும் ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுன தீர்மானித்துள்ளதாக ஊடகங்களில் வெளியான செய்தியை அறிந்து ஆச்சரியமடைந்தேன்.

அரசியலமைப்பின் 40ஆவது உறுப்புரை மற்றும் 1981ஆம் ஆண்டு 02ஆம் இலக்க ஜனாதிபதி தேர்தல் (சிறப்பு ஏற்பாடுகள்) உறுப்புரைகளின் பிரகாரம் புதிய ஜனாதிபதி தெரிவிற்கான நாடாளுமன்றத்தின் ஊடாக தேர்தல் எதிர்வரும் புதன்கிழமை நாடாளுமன்ற அமர்வை தொடர்ந்து இடம்பெறவுள்ளது.

பதில் ஜனாதிபதிக்கு ஆதரவு வழங்குவது தொடர்பான தீர்மானத்தை எந்த அதிகாரத்தின் கீழ் எடுத்தீர்கள்? தீர்மானத்தை எடுப்பதற்காக கலந்துகொண்டவர்களின் பெயர் என்ன?, கலந்துக்கொண்டவர்கள் எந்த அடிப்படையில் தெரிவு செய்தார்கள்?, கூட்டம் இடம்பெற்ற இடம், நேரம் மற்றும் திகதி என்ன,? அத்துடன் கலந்துரையாடலில் கலந்துகொண்டவர்களின் விவரம்?, ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுனவின் கட்சி அரசமைப்பிற்கமைய இந்தத் தீர்மானம் எந்த அடிப்படையில் முன்னெடுக்கப்பட்டது?. இந்த கேள்விகளுக்கான பதிலை விரைவில் பெற்றுக்கொள்ளும் உரிமை எனக்கு உண்டு.

உங்களின் பதில் விரிவுப்படுத்தப்பட்ட வகையில் அமைய வேண்டும் என்பதற்காக எனது கேள்விகளை தேசிய மற்றும் சர்வதேச ஊடகங்களுக்கு வெளிப்படுத்தியுள்ளேன் என ஜி.எல்,பீரிஸ், சாகர காரியவசத்திடம் கடிதம் ஊடாகக் குறிப்பிட்டுள்ளார்.

பதவி வெற்றிடமாகியுள்ள ஜனாதிபதி பதவிக்கு எதிர்வரும் வாரம் புதன்கிழமை நாடாளுமன்றில் இடம்பெறவுள்ள தேர்தலில் தான் போட்டியிடத் தயார் என பொதுஜன பெரமுனவின் நாடாளுமன்ற உறுப்பினர் டலஸ் அழகபெரும அறிவித்தார்.

டலஸ் அழபெருமவின் அறிவிப்பை தொடர்ந்து ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுனவின் பொதுச்செயலாளர் சாகர காரியவசம் ஜனாதிபதி தெரிவின் போது ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுன, பதில் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவிற்கு முழுமையாக ஆதரவு வழங்கும், டலஸ் அழகபெருமவிற்கு ஆதரவு கிடையாது எனக் குறிப்பிட்டார்.

சாகர காரியவசத்தின் அறிவிப்பை தொடர்ந்து பொதுஜன பெரமுனவின் தவிசாளர் ஜி.எல்.பீரிஸ் ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுனவின் உறுப்பினர் ஒருவருக்கு ஆதரவு வழங்குவதை விடுத்து, பிற தரப்பினருக்கு ஆதரவு வழங்குவது எந்தளவிற்கு நியாயமானதாக அமையும்.

சாகர காரியவசத்தின் அறிவிப்பு தொடர்பில் அவதானம் செலுத்தப்படும் எனக் குறிப்பிட்டார். இதனடிப்படையில் பேராசிரியர் ஜி.எல் பீரிஸ் ஆறு கேள்விகளுக்கு சாகர காரியவசத்திடம் பதில் கோரியுள்ளமை குறிப்பிடத்தக்கது.

## ஆர்ப்பாட்டக்காரர்களினால் முன்வைக்கப்படுகின்ற கோரிக்கைகள் நியாயமாக கையாளப்படவேண்டும்!

### அமைச்சர் டக்ளஸ் வலியுறுத்து



ஆர்ப்பாட்டக்காரர்களால் முன்வைக்கப்படுகின்ற கோரிக்கைகள், நியாயமாகக் கையாளப்பட வேண்டும் என அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா வலியுறுத்தியுள்ளார்.

ஆர்ப்பாட்டக்காரர்களுடன் கலந்துரையாடல்களை நடத்துவதற்கான புறச் சூழல்களை உருவாக்கி, மேற்படி விவகாரம் நியாயமாக அணுகப்பட வேண்டும் என அவர் கேட்டுக்கொண்டுள்ளார்.

சமகால அரசியல் நிலைவரங்கள் தொடர்பான பல்வேறு விடயங்கள் தொடர்பாக பதில் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவுடன் கருத்துக்களை பரிமாறிய போதே, அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா இந்த விடயம் தொடர்பான கருத்தையும் தெரிவித்தார்.

மேலும், இந்த விடயம் தொடர்பாக அடுத்த அமைச்சரவை கூட்டத்திலும் பிரஸ்தாபிக்க இருப்பதாக தெரிவித்துள்ள அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா, ஜனநாயக விழுமியங்களுக்கு உட்பட்டு மக்களால் முன்வைக்கப்படுகின்ற கோரிக்கைகளும் எதிர்பார்ப்புக்களும் நியாயமான முறையில் பரிசீலிக்கப்பட வேண்டும் என்ற தனது நிலைப்பாட்டை பதில் ஜனாதிபதிக்கு எடுத்துரைப்பதாகவும் தெரிவித்துள்ளார்.

## மோசடி அரசியல் கலாசாரத்துக்கு முற்றுப்புள்ளி வைக்கப்படவேண்டும்!

### டலஸ் ஆணித்தரம்

அனைத்துக்கட்சி அரசாங்கத்தை அமைப்பதற்காக எதிர்க்கட்சிகளுடன் இணைந்து செயற்பட தீர்மானித்துள்ளளேன் என நாடாளுமன்ற உறுப்பினர் டலஸ் அழகப் பெரும தெரிவித்துள்ளார்.

வரலாறாக மாறியுள்ள மோசடி அரசியல் கலாசாரத்திற்கு முற்றுப்புள்ளி வைப்பதே தனது பிரதான இலக்கு என நாடாளுமன்ற உறுப்பினர் டலஸ் அழகப்பெரும தெரிவித்துள்ளார்.

கடந்த சில தினங்களுக்கு முன்னர் ஜனாதிபதி வேட்பாளருக்கான போட்டியில் தானும் களமிறங்கவுள்ளேன் என என டலஸ் அழகப்பெரும அறிவித்திருந்தார்.

பொதுஜன பெரமுனவின் தலைமை டலஸ் அழகப்பெருமவை கொண்டு வருவதில் முனைப்பு காட்டினாலும் கட்சியின் பொதுச்செயலாளர் ரணில் விக்கிரமசிங்கவிற்கு ஆதரவு தெரிவித்துள்ளார்.

இந்நிலையில் தனது ருவிட்டரில் வெளியிட்டுள்ள பதிவிலேயே டலஸ் அழகப்பெரும இவ்வாறு குறிப்பிட்டுள்ளார்.

இருப்பினும் புதிய ஜனாதிபதியை தெரிவில் பிரதான எதிர்க்கட்சியான ஐக்கிய மக்கள் சக்தி சார்பாக சஜித் பிரேமதாஸ முன்மொழியப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

## ஜனாதிபதி தெரிவில் ரணிலை ஆதரிக்க பொதுஜன பெரமுன தீர்மானிக்கவில்லை

### அலிசப்றி திட்டவட்டக் கருத்து



*ஜனாதிபதி தெரிவின்போது பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவுக்கு ஆதரவளிப்பதற்கு ஶ்ரீலங்கா பொதுஜன பெரமுன எந்தத் தீர்மானமும் எடுக்கவில்லை.*

*19 ஆம் திகதியே அதுதொடர்பில் கலந்துரையாட இருக்கின்றோம் என ஶ்ரீலங்கா பொதுஜன பெரமுன நாடாளுமன்ற உறுப்பினரும் முன்னாள் நீதி அமைச்சருமான அலிசப்றி தெரிவித்தார்.*

*நாடாளுமன்ற அமர்வு நிறைவடைந்த பின்னர் நாடாளுமன்றக் கட்டடத்தொகுதியில் வைத்து ஊடகங்களுக்குக் கருத்துத் தெரிவிக்கையிலேயே இவ்வாறு தெரிவித்தார்.*

*இதுதொடர்பில் அவர் மேலும் தெரிவிக்கையில் -*

*ஜனாதிபதி வேட்பாளர்கள் தொடர்பிலான வேட்புமனு எதிர்வரும் 19ஆம் திகதியே இடம்பெற இருக்கின்றது. வேட்புமனு செலுத்திய பின்னர் அதுதொடர்பில் கலந்துரையாடி தீர்மானம் எடுப்போம்.*

*என்றாலும் ஜனாதிபதித் தெரிவில் எந்த வேட்பாளரைத் தெரிவுசெய்வது என ஶ்ரீலங்கா பொதுஜன பெரமுன இதுவரை எந்த தீர்மானத்தையும் எடுக்கவில்லை என்றே நினைக்கின்றேன்.*

*அத்துடன் ஜனாதிபதியாக பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவை தெரிவுசெய்ய தீர்மானித்திருப்பதாக கட்சியின் செயலாளர் தெரிவித்தமை தொடர்பில் எனக்கு தெரியாது.*

*கட்சிக்குள் இருப்பவர்களுக்கு தனிப்பட்ட கருத்துக்கள் இருக்கலாம். என்றாலும் கட்சியாக இதுவரை அவ்வாறானதொரு தீர்மானம் எடுத்திருப்பது தொடர்பாக எனக்கு தெரியாது. 19 ஆம் திகதியே இது தொடர்பில் கலந்துரையாடி தீர்மானம் எடுக்கும் என நினைக்கின்றேன். என்றார்.*

## அவசர நிவாரண வேலைத்திட்டங்களை நடைமுறைப்படுத்த பதில் ஜனாதிபதி முடிவு!

பொதுமக்களுக்கு எரிபொருள், எரிவாயு மற்றும் அத்தியாவசிய உணவுப் பொருள்களை வழங்கும் அவசர நிவாரண வேலைத்திட்டத்தை நடைமுறைப்படுத்த பதில் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க தீர்மானித்துள்ளார்.

நிவாரணம் வழங்குவதற்காக ஓகஸ்ட் மாதம் தாக்கல் செய்யப்படும் இடைக்கால வரவு செலவுத் திட்டத்தில் மேலதிக நிதியை பயன்படுத்தவும் முடிவு செய்யப்பட்டுள்ளது.

சனிக்கிழமை காலை அமைச்சர்கள் மற்றும் நாடாளுமன்ற உறுப்பினர்களுடன் இடம்பெற்ற கலந்துரையாடலின் போதே அவர் இதனை அறிவித்துள்ளார்.

எரிபொருள் மற்றும் உரங்களை முறையாகவும் உடனடியாகவும் வழங்குவதற்கும் இந்த கலந்துரையாடலின் போது விசேட கவனம் செலுத்தப்பட்டது.

இந்தக் கலந்துரையாடலில், உணவுப் பாதுகாப்புத் திட்டத்தை விரைவுபடுத்துமாறு பதில் ஜனாதிபதி ஆலோசனை வழங்கினார்.

மேலும், இந்தக் கலந்துரையாடலின் போது வர்த்தகர்கள் தமது தொழிலை எவ்வித இடையூறும் இன்றி நடத்துவதற்குத் தேவையான சூழலை உருவாக்கவும் தீர்மானிக்கப்பட்டுள்ளது.

இதேநேரம் ஊழலுக்கு எதிராக மேற்கொள்ளப்படும் நடவடிக்கைகள் தொடர்பாக செயற்பாட்டாளர்களுக்கு அறிவிக்கவுள்ளதாக பதில் ஜனாதிபதி மேலும் தெரிவித்தார்.

# நுட்பியல் அவத்தை

ஜனனீ தேவானந்த்
(முதுநிலை விரிவுரையாளர் - தகவல் தொழில்நுட்பம்), யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்)




## தொல்லையின்றிய ஈ.பணப்பரிவர்த்தனை

வீட்டில் தொலைக்காட்சி பார்ப்பதனால் தானியங்கிக் கட்டுப்பாட்டு சாதனம் கையில் இருக்கவேண்டியது கட்டாயமாகிறது. அதாவது ரிமோட் கையில் இல்லையென்றால் தொலைக்காட்சி சனல்களைப்பார்க்க முடியாதென்றாகிவிட்டது. குறிப்பாக விளம்பரத் தொல்லையிலிருந்து தப்புவதற்கு 'ரிமோட்' கையிலிருந்தாக வேண்டும். அதுவும் இலங்கையில் இருந்துகொண்டு இந்திய தொலைக்காட்சியைப் பார்ப்பதற்கான தண்டனையாக இந்திய விளம்பரங்களைப் பார்த்தாக வேண்டியுள்ளது. பெரும் தொல்லை தருகின்றன. அந்தத் தொல்லையிலிருந்து தப்பிக்க எம்மைக்காக்கும் ஒரே கடவுள் 'ரிமோட்' தான். ரிமோட் மூலம் சனலை மாற்றி தப்பிப்பதற்கு தனித்திறமை வேண்டும். இப்போ எல்லா தொலைக்காட்சி சனல்களும் நேரத்தில் சொல்லி வைத்தால் போல விளம்பரம் போடுகிறார்களோ என்ற சந்தேகமும் உண்டு. இந்த விளம்பரத்தொல்லையில் அதிகம் காணப்படுவது. இளநீர் குடிக்கிற இடத்திலயென்றாலும் சரி,சமோசா தின்னிற இடத்திலயென்றாலும் சரி, வாகனக்காப்புறுதி இல்லாமல் பொலிஸ் பிடித்தாலும் அது ஐந்து ரூபாவோ பத்து ரூபாவோ ஆயிரம் பத்தாயிரமோ உடனடியாக எந்த இடத்திலும் நின்றபடி கட்டிவிடலாம் என்ற விளம்பரங்கள் இந்திய தொலைக்காட்சிகளில் அதிக விளம்பரப்படுத்தப்படுகின்றன. Paytm, gpay, phonepe போன்ற செயலிகளின் அதிகம் விளம்பரங்களைக் காணமுடியும். சரி இந்த பணக்கொடுப்பனவு செயலிகள் மூலைமுடுக்கெலாம் எவ்வாறு இயங்குகின்றன. இந்த நுட்பியல் அவத்தையின் சூத்திரம் என்ன என்று பார்க்கலாம்.

முதலில் கொடுப்பனவு செயலி என்றால் என்ன? அதாவது பொருள்கள் மற்றும் சேவைகளுக்கு பணம் செலுத்துவதற்கும் விற்பனையாளர்கள், நண்பர்கள் மற்றும் குடும்பத்தினருக்கு பணம் அனுப்புவதற்குமான ஒருநுட்பியலாகும். இந்தச்செயலிகளின் பயன்பாட்டால் மக்கள் இப்போதெல்லாம் அதிக பணத்தை எடுத்துச் செல்வதில்லை, எனவே ஒரு சினிமாப்பட டிக்கெட்டுக்கான கட்டணத்தை நண்பருக்கு திருப்பிச் செலுத்துவதற்கு, குடும்ப உறுப்பினருக்கு பில் கொடுக்க உதவுவதற்கு அல்லது கையில் பணப்பையை வைத்திருக்காமல் ஏதாவது ஒரு கடையில் பணம் செலுத்துவதற்கு இந்த கட்டணச் செயலி உதவுகிறது. விரைவான உதவும் வழித்துணை எனலாம். அதாவது ஒருவர் தொலைபேசியில் டிஜிற்றல் பணப்பையை வைத்திருப்பது போன்றது.




கட்டணச் செயலிகள் நடமாடும் டிஜிற்றல் பணப்பையைப் போல் செயல்படுகின்றன. இதற்கு வங்கிக் கணக்குத் தகவல் மற்றும் கிரெடிட் கார்டுகளை இந்தச் செயலியுடன் இணைக்க வேண்டும். அது அதைப் பாதுகாப்பாகச் சேமித்து வைக்கின்றது. அதை நேரடியாக




பணம் அனுப்பவும் பெறவும் பயன்படுத்தலாம். ஒரு பயணத்தில் பணப்பையை கொண்டு செல்ல வேண்டிய, அதை எப்படி வைத்திருப்பது எப்படிப்பாதுகாப்பது என்ற கவலைகள் இந்தச் செயலிகளால் தீர்ந்து போகின்றன எனலாம். மேலும் சர்வதேச அளவில் சில பயன்பாடுகளையும் பயன்படுத்த முடியும். பணம் அனுப்புவதற்கும் பெறுவதற்கும் ஒன்லைனிலும் கடைகளிலும் பொருள்களைப் பெறுவதற்கும் இது விரைவான மற்றும் வசதியான வழியாகும்.

இதைப்பயன்படுத்தும் போது எமக்கு ஏற்படுகின்ற சந்தேகம் ஒவ்வொரு கட்டணத்தையும் செலுத்தும் போதும் எவ்வளவத்தை வெட்டித்தள்ளுவானோ தெரியாது என்பதாகும். ஒரு வழிப்பயணத்தில் ஒரு கடையில் சமோசா வாங்கிச்சாப்பிடுகிறீர்கள் முப்பது ரூபா கொடுக்க வேண்டும் கொடுப்பனவுச் செயலி மூலம் செலுத்துகிறீர்கள். அதற்கு 3வீதம் மேலதிக கட்டணம் என்றால் யாரொருவர் அதனைப்பயன்படுத்த விரும்புவார். அதனால் இந்தச் செயலிகளை கொடுப்பனவுக்கு பயன்படுத்தும் போது முற்றிலும் இலவச சேவையாக வழங்குகிறார்கள். இதே போல பணம் பெறுதல் அல்லது நண்பர்கள் மற்றும் குடும்பத்தினருக்கு இடையே பணம் அனுப்புதல் போன்ற சேவைகளுக்கும் இலவச வசதிகள் உண்டு. இருந்தாலும், சில கட்டணப் பயன்பாடுகளுக்கு நாணயப் பரிமாற்றம் மற்றும் செய லாக்கக் கட்டணம் போன்றன அறவிடப்படுகின்றன. இலங்கையில் டெபிட் காட் பயன்பாட்டுக்கு மறைமுகக்கட்டணங்கள் அதிகரித்து வருகின்றன. பணத்தை டெபிட்காட் மூலம் வங்கியில் எடுக்கும் போது அச்சிடப்பட்ட மீதி விவரங்கள் அடங்கிய தாளுக்கு அதிகளவு கட்டணம் அறவிடப்படுகின்றது. இவ்வாறான நிலையில் இவ்வாறான கொடுப்பனவுச் செயலிகள் இலங்கையில் சாத்தியமாகுமா? ஏன்ற சந்தேகம் உண்டு. தற்போதும் சில கடை களில் பண அட்டைக் கொடுப்பனவுக்கு 2.5 % முதல் 3% வரை கட்டணம் விதிக்கப்படும் என்று கூறப்படுவதைக்காணலாம்.

ஆனால் இந்தக் கட்டணச் செயலிகள் இலவச கட்டணம் செலுத்தும் பயன்பாடுச் சேவையை வழங்குகின்றன. இந்தச் சேவைக்கு கட்டணம் எதுவும் இல்லை, மேலும் அவை வசதியானவை பயன்படுத்த எளிதானவை. இதனால் உலகளவில் கொடுப்பனவுச் செயலிகளைப் பயன்படுத்துவோர் நாளுக்கு நாள் அதிகரித்து வருகிறார்கள். பெருவணிக நிறுவனங்கள் இந்தச் சேவையைப் வழங்குகின்றன.

இங்கு எமக்கு முன் உள்ள கேள்வி என்னவென்றால் எவ்வாறு சிறந்த கொடுப்பனவுச் செயலியைத் தேர்ந்தெடுப்பதென்பதாகும். முதலில் செயலியின் நற்பெயர் கவனத்தில் கொள்ளப்பட வேண்டும். அதன் செயல்திறன் எவ்வாறு உள்ளது? அதாவது பயன்பாட்டின் எளிமை, அவை எந்தெந்த தளங்களில் வேலை செய்கின்றன, பணத்தை அனுப்பவது, பெறுவதின் விரைவுத் தன்மை போன்றவை கவனத்தில் கொள்ளப்பட வேண்டும்.

ஒரு செயலியின் கட்டண பயன்பாடுகளில் மென்பொருள் மற்றும் தகவல் கூறுகள் இரண்டும் இருக்கும். இங்கு பாதுகாப்பான மற்றும் நியாயமான மின்னணு கட்டண முறைகள் ஒரு முக்கியமான விடயமாகும்.இதற்கான தனிப்பட்ட தகவலுக்கான பாதுகாப்பு மற்றும் குறியாக்கத்தை வழங்குவதற்கும் உண்மையான பரிவர்த்தனையை நடத்துவதற்கும் மென்பொருள் நுட்பியல் உதவுகிறது.

மொபைல் கட்டணங்களின் நான்கு வகைகள் உள்ளன

1. அட்டை அடிப்படையிலான கொடுப்பனவுகள்
2. நடமாடும் பணப்பைகள்
3. அட்டையில்லாப் பரிவர்த்தனை
4. நிகழ்நேர அடிப்படையிலான செயல்பாடுகளில் பணம் செலுத்துபவர் மற்றும் பணம் பெறுபவர் வங்கி கணக்குகளுக்கு இடையே நேரடி பரிமாற்றங்கள்

கொடுப்பனவுச் செயலிகள் இயங்குவதற்கு என்.எப்.சி. (Near Field Communication) நுட்பியல் பயன்படுத்தப்படுகிறது. கடந்த சில ஆண்டுகளாக, என்.எப்.சி. கட்டண விண்ணப்பங்கள் கணிசமான பிரபலத்துடன் அதிக கவனத்தைப் பெற்று வருகின்றன. இந்த புரட்சிகர கட்டண முறை உலகம் முழுவதும் மகத்தான புகழைப் பெற்றுள்ளது. என்.எப்.சி. என்பது ஒரு குறுகிய தூர வயர்லெஸ் நெட்வொர்க்கிங் தொழில்நுட்பமாகும், இது இரண்டு தொலை சாதனங்களுக்கு இடையே 10 செ.மீ. அல்லது அதற்கு மேற்பட்ட தரவுப் பகிர்வை செயல்படுத்துகிறது. விசா, மாஸ்டர்கார்டு மற்றும் அமெரிக்கன் எக்ஸ்பிரஸ் போன்ற பெரிய கட்டண அட்டை வலையமைப்புக்களால் இது ஆதரிக்கப்படுகிறது. எந்தவொரு கடையின் பண மேசையிலும் பணம் செலுத்த, பரிவர்த்தனையைப் பிடிக்க, ஸ்கேனருக்கு அடுத்ததாக தொலைபேசியை வைப்பது போதுமானது. இது நிலையான RFID (ரேடியோ அதிர்வெண் அடையாளம்) வழங்குகிறது என லாம். இது ஒரு ஸ்மார்ட் கார்டையும் ஒரு யூனிட்டில் ஒரு ரீடரையும் ஒருங்கிணைக்கிறது. இருப்பினும், மொபை லில் உள்ளமைக்கப்பட்ட என்.எப்.சி தொழில்நுட்பம் இருப்பதையும், தரவைப் பகிர்வதற்காக மொபைலில் புளூடூத்




இயக்கப்பட்டிருப்பதைப் போலவே, பணம் செலுத்துவதற்கும் அது இயக்கப்பட்டிருப்பதை உறுதிசெய்வது முக்கியம்.

இங்கு, கட்டணத்தை முடிக்க, ஒரு என்.எப்.சி ரீடர் மற்றும் கட்டணச் சாதனங்கள் நெருக்கமாக இருக்க வேண்டும், பின்னர் என்.எப்.சி மறைகுறியாக்கப்பட்ட தரவை மாற்றும். இந்த பொறிமுறையானது செக் அவுட்டை மிக வேகமாகவும் பாதுகாப்பாகவும் செயல்பட அனுமதிக்கிறது மற்றும் என்.எப்.சி கொடுப்பனவுகளை மிகவும் நம்பகமான மற்றும் எளிதான கட்டண முறைகளில் ஒன்றாக மாற்றுகிறது.

உலகளவில் இந்தியா இந்தக் கொடுப்பனவுச் செயலிகளுக்கு விரைவாக தன்னை மாற்றிவரும் நாடு எனலாம். இந்தியாவில் காணப்படும் சில பிரபலமான கொடுப்பனவுச் செயலிகள்,Paytm,Google Pay,Amazon Pay,JIO Money,Freecharge, Yono SBI, Airtel Money, Payzapp.

# ஜனாதிபதி தெரிவு வாக்களிப்பு தொடர்பில் எம்.பிக்களுக்கு கொலை மிரட்டல் விடுப்பு!

## விசாரணை மேற்கொள்ளுமாறு பதில் ஜனாதிபதி அதிரடி உத்தரவு

தேர்தலின் போது சுதந்திரமாக தமது வாக்குகளைப் பயன்படுத்துவதற்கு நாடாளுமன்ற உறுப்பினர்களுக்கு காணப்படும் உரிமைக்கு இடையூறு விளைவித்து, சமூகவலைத்தளங்கள்ஊடாகஅழுத்தம்பிரயோகிக்கும் நபர்கள் தொடர்பில் விசாரணைகளை முன்னெடுக்குமாறு பதில் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க பாதுகாப்புத் துறையினருக்கு ஆலோசனை வழங்கியுள்ளார்.

நாடாளுமன்ற உறுப்பினர்களுக்கு காணப்படும் அதிகாரங்கள் மற்றும் சிறப்புரிமைகள் தொடர்பான சட்டம் உட்பட, அதனுடன் தொடர்புடைய குற்றவியல் சட்டத்தின் அடிப்படையிலும் உரிய விசாரணைகளை முன்னெடுக்குமாறும் பதில் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க பாதுகாப்பு தரப்பினருக்கு வழங்கியுள்ள ஆலோசனையில் குறிப்பிட்டுள்ளார்.

நாடாளுமன்ற உறுப்பினர்களின் அதிகாரங்கள் மற்றும் சிறப்புரிமைகள் சட்டத்தின் கீழ், அவர்கள் நாடாளுமன்றத்துக்கு வருவதற்கும், திரும்பிச் செல்வதற்கும் சுதந்திரம் காணப்படுவதாகவும், நாடாளுமன்றத்துக்குள்ளும் சுதந்திரமாக செயற்படுவதற்கு வாய்ப்பளிக்கப்பட்டுள்ளதாகவும் குறிப்பிடப்பட்டுள்ளது.

அதற்கு எதிராக செயற்படுகின்றமை நாடாளுமன்ற உறுப்பினர்களின் சிறப்புரிமையை மீறுவதுடன் அச்சுறுத்தலாகவும் அமையும் என பதில் ஜனாதிபதி வழங்கிய ஆலோசனையில் குறிப்பிடப்பட்டுள்ளது.

வன்முறையைப் பரப்பும் கலகக்காரர்களால் சமூக வலைத்தளங்கள் ஊடாகக் குறிப்பிட்ட வேட்பாளர்களுக்கு வாக்களித்து விட்டு கிராமத்துக்கு வர வேண்டாம் என்று பதிவிட்டு , அச்சுறுத்தல் விடுக்கப்படுவதாக பதில் ஜனாதிபதிக்கு முறைப்பாடுகள் கிடைக்கப் பெற்றுள்ளன.

இதற்கு முன்னரும் நாடாளுமன்ற உறுப்பினர்களின் இல்லங்களுக்கு தீ வைத்து அவற்றை அழித்துள்ளதோடு, நாடாளுமன்ற உறுப்பினர் ஒருவரும் கொல்லப்பட்டுள்ளார்.

இவற்றை சுட்டிக்காட்டி கலகக்காரர்களால் மறைமுகமாக கொலைமிரட்டல் விடுக்கப்படுவதாகவும் பதில் ஜனாதிபதிக்கு நாடாளுமன்ற உறுப்பினர்களிடமிருந்து முறைப்பாடுகள் கிடைக்கப்பெற்றுள்ளன.

இவ்வாறு கொலை மிரட்டல் விடுக்கப்படுவதால் தமக்கு நாடாளுமன்றத்தில் சுதந்திரமாக வாக்களிக்க முடியாத சூழல் காணப்படுவதாகவும் பதில் ஜனாதிபதியிடம் நாடாளுமன்ற உறுப்பினர்கள் தெரிவித்துள்ளனர்.

அதற்கமைய இவை தொடர்பில் துரித விசாரணைகளை முன்னெடுக்குமாறு பதில் ஜனாதிபதி பாதுகாப்புத் தரப்பினருக்கு ஆலோசனை வழங்கியுள்ளார்.

ஜனாதிபதியைத் தெரிவு செய்வதற்காக வாக்களிக்கும் போது, ஒரு நாடாளுமன்ற உறுப்பினரால் பிரிதொருவருக்கு அச்சுறுத்தல் மற்றும் அழுத்தம் பிரயோகிக்கப்பட்டால், நாட்டில் நடைமுறையிலுள்ள சட்டத்தின் பிரகாரம் கடும் நடவடிக்கை எடுக்கப்படும் என்று பதில் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க முதலாவது அமைச்சரவை கூட்டத்திலும் தெரிவித்திருக்கின்றமை குறிப்பிடத்தக்கது.

# கோட்டாபயவுக்கு எதிராக சிங்கப்பூரில் ஆர்ப்பாட்டம்!

## ஒருவர் மாத்திரம் கலந்துகொண்டார்

சிங்கப்பூரிற்குள் கோட்டாபய ராஜபக்ஷவை அந்த நாட்டின் அரசாங்கம் அனுமதித்தமைக்கு எதிராக இறுதிநேரத்தில்ஏற்பாடுசெய்யப்பட்ட ஆர்ப்பாட்டத்தில் ஒருவர் மாத்திரம் கலந்துகொண்டுள்ளர் எனஸ்டிரெய்ட்டைம்ஸ்தெரிவித்துள்ளது.

சிங்கப்பூரின் ஹொங்லிம் பார்க்கில் உள்ள ஸ்பீக்கர்ஸ் கோர்னரில் இந்த ஆர் ப்பாட்டம் இடம்பெற்றது.

2020 தேர்தலில் மக்கள் குரல் சார்பில் போட்டியிட்ட பிரபு இராமச்சந்திரன் இதனை ஏற்பாடு செய்திருந்தார்.

இந்த விடயத்தை பற்றி எவரும் பேசுகின்றார்கள் இல்லை,யாராவது இது தொடர்பாகப் பேசவேண்டும் என நான் கருதுகின்றேன், கோட்டாபய ராஜபக்ஷவை இங்கு வைத்திருப்பதன் மூலம் நாங்கள் சர்வதேச சமூகத்துக்குத் தெரிவிக்கின்ற செய்தி தொடர்பாக யாராவது பேசவேண்டும் என அவர் தெரிவித்துள்ளார்.

அவர் வேண்டப்படாதவர் அரசியல்ரீதியில் நன்கு அறியப்பட்டவர் ஊழல்களில் ஈடுபட்டிருக்ககூடியவர், அரசாங்கம் தெரிவித்துள்ளது போல அவர் இலங்கை கடவுச்சீட்டுடன் உள்ள இன்னொரு நபரல்லர் எனவும் அவர் தெரிவித்துள்ளார்.

நிதித்துறையில் பணியாற்றும் பிரபு ஆர்ப்பாட்டம் தொடர்பாக வெள்ளிக்கிழமை காலை அறிவித்திருந்தார், அவர் நான்கு மணிமுதல் ஆறு மணிவரை ஆர்ப்பாட்டம் இடம்பெறும் என அறிவித்திருந்தபோதிலும்எவரும்கலந்துகொள்ளாததால் 4.48 மணிக்கு ஆர்ப்பாட்டத்தை முடித்துக்கொண்டார்.

முகநூலில் அவர் வெளியிட்ட நேரலையை 20 பேர் பார்வையிட்டுள்ளனர்.

68 வயது புளொக்கரும் கலந்து கொண்டுள்ளார் அவரும் தேர்தலில் போட்டியிட்டவர்.

ஏன் ராஜபக்ஷ தனது இராஜினாமாவை சிங்கப்பூரில் அறிவிப்பதற்கு திட்டமிட்டார் என கேள்வி எழுப்பிய அவர் சிங்கப்பூரில் அவருக்குள்ள வங்கிக் கணக்குகளை பகிரங்கப்படுத்தவேண்டும் என வேண்டுகோள் விடுத்தார்.

# குரக்கன் செய்கையில் விவசாயிகள் ஆர்வம்

யாழ்.மாவட்டத்தின் வளங்களில் முக்கியமான ஒரு தானிய வகையாக காணப்படும் பெருமளவு இரும்புச் சத்தைக் கொண்டுள்ள குரக்கன் செய்கையில் தற்போது யாழ். வலிகாமத்தின் பல பகுதிகளிலும் விவசாயிகள் ஆர்வம் காட்டி வருகின்றது அவதானிக்க முடிகின்றது.

நாட்டில் தற்போது கடுமையான பொருளாதார நெருக்கடி நிலவி வரும் நிலையில் எதிர்காலத்தில் பாரியளவு உணவு நெருக்கடியும் ஏற்படக் கூடும் எனத் துறைசார் வல்லுநர்களால் எதிர்வு கூறப்பட்டுள்ளது.

இந்த நிலையில் உணவு நெருக்கடி ஏற்படும் பட்சத்தில் தமது உணவுத் தேவையைத் தாமே ஈடு செய்யும் வகையில் எரிபொருள் நெருக்கடிக்கு மத்தியிலும் விவசாயிகள் இவ்வாறு குரக்கன் செய்கையில் ஆர்வம் காட்டி வருவதைக் காண முடிகின்றது. குறிப்பாக யாழ்.வலிகாமத்தின் கட்டுவன், குப்பிழான், ஏழாலை, புன்னாலைக்கட்டுவன், ஈவினை, சுன்னாகம், அச்செழு, ஊரெழு, உரும்பிராய் உள்ளிட்ட பகுதிகளில் விவசாயிகள் குரக்கன் செய்கையில் பரவலாக ஈடுபட்டு வருகின்றமையும் இங்கு குறிப்பிடத்தக்கது.

# ரணிலுக்கு ஆதரவு வழங்குவது சாகரவின் தீர்மானம் அது பொதுஜன பெரமுனவினரின் தீர்மானம் அல்ல!

## பிரேம்நாத் தொலவத்தே கூறுகிறார்



புதிய ஜனாதிபதி தெரிவிற்கான வாக்கெடுப்பில் பதில் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவிற்கு ஆதரவு வழங்கத் தீர்மானித்துள்ளதாக பொதுஜன பெரமுனவின் பொதுச்செயலாளர் சாகர காரியவசம் குறிப்பிட்டுள்ளமை அவரது தனிப்பட்ட தீர்மானமே தவிர, கட்சியின் உத்தியோகப்பூர்வ தீர்மானமல்ல என பொதுஜன பெரமுனவின் நாடாளுமன்ற உறுப்பினர் பிரேம்நாத் தொலவத்தே தெரிவித்தார்.

இது தொடர்பில் அவர் மேலும் குறிப்பிட்டுள்ளவை வருமாறு –

புதன்கிழமை இடம்பெறவுள்ள புதிய ஜனாதிபதி தெரிவிற்கான வாக்கெடுப்பில் பொதுஜன பெரமுனவின் உறுப்பினர்கள் பதில் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவிற்கு முழுமையான ஆதரவு வழங்குவார்கள் என்றும், பொதுஜன பெரமுனவின் உறுப்பினர் டலஸ் அழகபெருமவிற்கு ஆதரவு வழங்கப் போவதில்லை எனவும் சாகர காரியவசம் குறிப்பிட்டுள்ளமை தொடர்பில் கட்சியின் தவிசாளர் பேராசிரியர் ஜீ.எல்.பீரிஸ் அதிருப்தி தெரிவித்துள்ளமையை கவனத்தில் கொள்ள வேண்டும்.

பதில் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவிற்கு ஆதரவு வழங்குவதாக பொதுசெயலாளர் சாகர குறிப்பிட்டுள்ளமை அவரது தனிப்பட்ட தீர்மானமே தவிர கட்சியின் உத்தியோகபூர்வமான தீர்மானமல்லஎன்பதைத்தெளிவாகக் குறிப்பிடுகின்றேன்.

பொதுஜன பெரமுனவின் சிரேஷ்ட உறுப்பினரான டலஸ் அழகப்பெருமவிற்கு ஆதரவு வழங்குவது சிறந்த தீர்மானமாக அமையும் என்பதைக் கட்சியின் பெரும்பாலான உறுப்பினர்கள் ஏற்றுக்கொண்டுள்ளனர்.

டலஸ் அழகபெருமவிற்கு ஆதரவு வழங்குவது தொடர்பாகப் பல்வேறு மட்டத்தில் பேச்சு முன்னெடுக்கப்பட்டுள்ளது. பொதுஜன பெரமுனவின் பொதுசெயலாளர் சாகர காரியவசத்தின் முரண்பாடான கருத்துக்கள் கட்சியின் பலவீனத்துக்கும், பொதுஜன பெரமுன தலைமையிலான அரசாங்கத்தின் வீழ்ச்சிக்கும் பிரதான காரணியாக அமைந்தது.

இவரது செயற்பாடுகள் தொடர்பாக உரிய நடவடிக்கைகளை முன்னெடுக்குமாறு கட்சியின் உயர்மட்டத்துக்கு அறிவுறுத்தியுள்ளோம். – என்றார்.

# யுத்தக் குற்றங்கள் மற்றும் மனித உரிமை மீறல்களில் ஈடுபட்டவர்களுக்கு சர்வதேச விசாரணை அவசியம்!

## சர்வதேச மன்னிப்புச்சபை வலியுறுத்து

யுத்தக் குற்றங்கள் மனித குலத்துக்கு எதிரான குற்றங்கள் மனித உரிமை மீறல்களில் ஈடுபட்டவர்களை விசாரணை செய்வதற்கான நடவடிக்கைகளை சர்வதேச சமூகம் எடுக்கவேண்டும் என வேண்டுகோள் விடுத்துள்ள சர்வதேச மன்னிப்புச்சபையின் தென்னாசிய அலுவலகம் சர்வதேச நியாயாதிக்கத்தையும் பயன்படுத்தவேண்டும் எனவும் கேட்டுக்கொண்டுள்ளது.

டுவிட்டர் பதிவில் சர்வதேச மன்னிப்புச்சபையின் தென்னாசிய அலுவலகம் மேலும் தெரிவித்துள்ளதாவது–

ஐக்கியநாடுகள் மனித உரிமை ஆணையாளர் அலுவலக அறிக்கையில் பரிந்துரைக்கப்பட்டுள்ளது போன்று சர்வதேச குற்றங்கள், சித்திரவதைகள் பலவந்தமாக காணாமல்போகச்செய்தல் மனித உரிமைமீறல்கள், மனித குலத்துக்கு எதிரான குற்றங்கள் யுத்த குற்றங்களில் ஈடுபட்டவர்களை விசாரணை செய்து வழக்கு தாக்கல் செய்யுமாறும் சாத்தியமான சூழ்நிலைகளில் சர்வதேச நியாயாதிக்கத்தை பயன்படுத்துமாறும் சர்வதேச சமூகத்தை நாங்கள் கேட்டுக்கொள்கின்றோம்.

மேலும் நம்பகத்தன்மை மிக்க உள்நாட்டு பொறிமுறைகள் இல்லாத பட்சத்தில் பொறுப்புக்கூறலை முன்னெடுப்பதற்கான ஏனைய சாத்தியக்கூறுகளை ஆராய வேண்டும் எனவும் கேட்டுக்கொள்கின்றோம் என சர்வதேச மன்னிப்புச்சபை தெரிவித்துள்ளது.

**இக்கட்டுரையாளர் செல்லத்துரை ரவீந்திரன் சிரேஷ்ட சட்டத்தரணி. ஆஸ்திரேலியாவைத் தளமாகக் கொண்டு இயங்கும் இலங்கைப் புலம்பெயர் சட்டவாளர். இலங்கையில் சன்சோனிக் கமிஷன் விசாரணைகளில் தமிழர் தரப்பில் பிரதான பங்காற்றிய சட்டத்தரணி. தமிழ் புனர்வாழ்வுக் கழகத்தின் பிதாமகர்களுள் ஒருவர். தமிழரின் உரிமைப் போராட்டத்துடன் நெருக்கமாகச் செயற்பட்ட – செயற்படுகின்ற – புலமையாளர். 'காலைக்கதிர்' வாசகர்களுக்கு நன்கு அறியப்பட்ட கட்டுரையாளர். அரசையும் ஜனாதிபதியையும் பதவியை விட்டுப் போகும்படி வலியுறுத்தி தற்போது நடக்கும் போராட்டங்களை தமிழரின் உரிமைப் போராட்ட அனுபவங்களோடு இத்தொடரில் ஒப்பிட்டுப் பார்க்கின்றார் அவர்.**

# யாழ்ப்பாணம் தொடக்கம் காலிமுகத்திடல் வரை...!



- செல்லத்துரை ரவீந்திரன் -

**அங்கம்-65**

### மோர்வே பேச்சுக்கள்

சந்திரிகாவின் காலத்தில் தொடங்கிய நோர்வே நாட்டின் ஊடான சமாதானப் பேச்சுக்களில், பின்னர் அப்போதைய ரணில் அரசின் தரப்பில் பேச்சுக்களில் முக்கிய பங்கு வகித்தவர் பேராசிரியர்



ஜீ.எல். பீரிஸ். சந்திரிகாவின் வழிகாட்டலில் தான் பங்குபற்றி உருவாக்கிய நகல் யாப்பிலும் மேம்பட்டதாக சமஷ்டி முறையிலான கட்டமைப்பில் தீர்வு ஒன்றைக் காணலாம் என விடுதலை புலிகளின் மதியுரைஞர் அன்ரன் பாலசிங்கத்துடன் இணக்கம் கண்டார்.

தமிழ் மக்களின் புலம்பெயர் சமூகத்தின் புத்திஜீவிகளும், பங்குதாரிகளும், பாலசிங்கத்தைத் தள்ளி வைத்து போராட்டத்தைத் தொடர பிரபாகரனுக்கு ஊக்கமளித்தமையாக், அவர் அதைத் தொடர, அதையும் சாதகமாகப் பாவித்துத் தனது திட்டமாக இருந்த 'முடியும் வரை போர்' என்பதை மஹிந்த ஒப்பேற்றி முடித்தார்.

அரசமைப்புச் சட்டத்தில் இருக்கும் 13ஆவது திருத்தத்திற்கும் மேல் சென்று அதிகாரப்பரவல் தருவேன் என்று போர் தொடங்கிய காலத்திலும், முடிந்த நாள்களிலும் உறுதி தந்தவர் மஹிந்தர். அந்த உறுதிகள் தமிழ், சிங்கள மக்களை நோக்கியவை மட்டுமல்ல, இந்தியாவிற்கும் சர்வதேசத்திற்கும் கூட தரப்பட்டவை.

பின்னர் தமிழ் மக்களின் அரசியல் தலைமையாகக் கூட்டமைப்பு அதிகாரம் செலுத்தி, தனி நாட்டு கோரிக்கையைக் கைவிட்டு, சமஷ்டித் தீர்வு தான் கேட்கிறோம் என மக்களின் ஆதரவை பெற்று, வழங்கப்பட்ட வாக்குறுதிகளை பெற்றுக் கொள்ள எந்தக் கிளர்ச்சியோ போராட்டங்களோ (பொத்துவிலில் இருந்து பொலிகண்டி வரை என்பதைத் தவிர) நடத்தாமல், நாடாளுமன்றத்தின் ஊடாக புதிய சமஷ்டி அரசமைப்பைப் பெற்று விடலாம் என்ற அபரிமித நம்பிக்கையிலும், சர்வதேசம் ஏதும் செய்யும்தானே என்ற எண்ணங்களிலும் காலங்கள் உருண்டன; தேர்தல்கள் கடந்தன.

தேர்தல்களுக்குத் தேர்தல் பெரும்பான்மை கட்சிகளாலும் கூட அரசமைப்புச் சட்டம் பற்றி பேசப்படும். ஆனால் அவற்றின் மாற்றங்களையும் வரலாறுகளையும் உற்று நோக்கினால் அவை பௌத்த மதத்தை முன் நிறுத்தவும், சிறுபான்மையினரை – முக்கியமாக தமிழ் மக்களை – ஒதுக்கவும், அவர்களுக்கு தனித்துவமாக இருந்த தேசம் ஒன்றை ஏற்றுக்கொள்ளாமல் ஒற்றையாட்சியைப் பலப்படுத்தவும், அதிகாரப் பரவலை நீக்கவும் பாவிக்கப்பட்டன என்பது புலனாகும். கோட்டாபய அந்தப் போக்கை முழுமைப்படுத்தக் கங்கணம் கட்டிப் பதவி ஏற்றார்.

இதுவரை யாக்கப்பட்ட அரசமைப்புகள் எவையுமே மக்களால், மக்களுக்காக, அவர்களின் பங்களிப்புடன், அரசு அவர்களுக்குப் பொறுப்பு கூற வேண்டும் என்ற விதங்களில் ஆக்கப்பட்டவை அல்ல.

தேர்தலில் வென்று அரசமைக்கும் கட்சி தனது பெரும்பான்மையால் தங்களுக்கு ஒரு புதிய அரசமைப்பை அமைக்க மக்கள் அங்கீகாரம் தந்திருக்கிறார்கள், அதனை மக்களின் பிரதிநிதிகளாகத் தாங்கள் செயல்வடிவம் கொடுத்து உருவாக்குவார்கள், நாம் அப்படி உருவாக்கு–வதை மக்கள் ஏற்றுக் கொள்வார்கள், ஏற்றுக்கொள்ள வேண்டும் என்ற அடிப்படையில அவை ஆட்சியாளர்களால் திணிக்கப்பட்டன. அதுதான் யதார்த்தம். ஆகவே, அவை கட்சிகளினதும், பேரினவாதிகளினதும் கொள்கைகளுக்கும் லட்சியங்களுக்கும் ஏற்ப அமைந்தன. ஆக, தாங்கள் உருவாக்கிய அரசமைப்பை மதித்து, மக்கள் அதை மீறாமல், அந்தச் சட்டங்களின் கீழ் அடிமைகள்போல பயணிக்கப்பழக்கப்பட்டார்கள்.

அரசமைப்புச் சட்டங்கள் பெருமளவில் தமிழ் மக்களுக்கு எதிராக மீறப்பட்டன. அவற்றில் ஏதோ ஒன்று, இரண்டைத் தவிர, நீதி பரிபாலனமும் கண்டு கொள்ளவில்லை. மாறாக, சட்ட விளக்கங்கள் நீதிபதிகளால் அவற்றுக்கு அனுசரணையாக அளிக்கப்பட்டன.

இவற்றினால்தான் காலி முகத் திடல் போராளிகள் தங்களது கொள்கைகளிலும் சித்தாந்தங்களிலும் 'மக்களால், மக்களுக்கான, மக்களுக்குப் பொறுப்பு கூறக்கூடிய, அவர்களால் நிர்வகப்படுத்தப்படக்கூடிய குடியரசு யாப்பு ஒன்று தென் ஆப்பிரிக்கா, சிலி போன்ற நாடுகளில் இருப்பவை மாதிரி ஏற்படுத்தப்பட வேண்டும்' என்று கூறுகிறார்கள்.

### காலிமுகத் திடல் போராளிகளின் அரசமைப்பு

காலி முகத் திடலில் தோன்றி இன்று வரை நின்று போராடுபவர்கள் தங்களுக்கு எரிவாயு, உணவு, டீசல், மருந்து போன்ற அத்தியாவசியப் பொருள்கள் கட்டுப்பாடு இல்லாமல் நியாய விலையில் கிடைக்கும் விதத்தில் நிர்வாகம் நடக்கவில்லை என்பதற்காக கிளர்ச்சிக்குப் புறப்பட்டவர்கள் என்ற அணுகுமுறையையே தமிழ் மக்கள் கொள்ள வேண்டும். அவர்கள் ஓர் அரசியல் புரட்சியை முன்னெடுக்கக் கொள்கைப் பிரகடனங்களில் புறப்பட்டவர்கள் அல்லர். ராஜபக்ஷ ஆட்சியை நீக்கி விட வேண்டும், நிர்வாக சீர்கேடுகளுக்கு அவர்கள்தான் காரணம் என கணித்தார்கள். பின்னர் அவர்களோடு (காலிமுகத் திடல் போராளிகளோடு) சேர்ந்து இயங்கிய பின்புலங்களால் சில கொள்கைகளும் தீர்மானங்களும் மாற்றத்திற்கான தேவைகள் என முன் வைக்கப்பட்டன. ஆனாலும் பேரினவாதம், அவை புரட்சியாக வளர்ந்து தென்னிலங்கை இதுவரை அனுசரித்து வந்த ஒற்றையாட்சி நிலைப்பாட்டை மாற்ற விடவில்லை. ஆதலால் இந்தக் காலிமுகத்திடல் போராளிகளிடமிருந்தும் தமிழ் மக்களின் தனித்துவங்களை ஏற்று, அவர்களது பாரம்பரிய பிரதேசங்களில் அவர்களுக்கு அதிகாரப் பரவல் தரப்பட வேண்டும் என்று ஆணித்தரமான கொள்கை பிரகடனங்கள் வெளிவரவில்லை. அருவல் வெருவலாகவோ மேற்பூச்சுக்கோ சிறுபான்மையினர் வேறாக நடத்தப்படக்கூடாது, அவர்கள் எல்லோரும் ஒரு நாட்டு மக்களாக சரிசமமாக நடத்தப்பட வேண்டும், பன்முகத் தன்மையும், எல்லா மதங்களும் சமமாக மதிக்கப்பட வேண்டும் என்று பரப்புரைகள் தரப்பட்டன. எனினும் மிகவும் திடமாக பௌத்தத்திற்கு முன்னுரிமை கொடுக்கத் வேண்டிய தேவையில்லை, அரசமைப்பு மதச் சார்பற்றதாக இருக்க வேண்டும் என்ற பொது நிலைப்பாட்டைக் காணவில்லை. இந்த மாற்றங்கள் தேவையானவை என ஏற்றுக்கொள்ளாத வரையில் தமிழ் மக்கள் முற்று முழுதாக அரசியல் தீர்வை நோக்கிப் போவதற்கான சாத்தியங்கள் குறைவு.

காலிமுகத் திடல் போராளிகளோடும், கட்சித் தலைவர்களுடனும் நடந்த கூட்டங்களில் மனோ கணேசன் முன்வைத்து, பின் தன் முகநூலில் அவர் பதிவிட்டிருந்த தவற்றைக் குறிப்பிட்டிருந்தேன். ஒற்றையாட்சிக்குள் அதிகாரப் பரவல் எல்லாம் கேட்காமல், ஒரு நாட்டு மக்களாக, சம உரிமைகளோடு சேர்ந்து போவோம், ஏதோ ஒரு சமஷ்டியின் சாயல் போதும் என்ற எண்ணங்கள் கூட்டமைப்புக்குள்ளேயே எழுவதாக தமிழ் மக்கள் ஆதங்கப்படுகிறார்கள்.

காலம் கனிந்து உள்ள இந்த நாள்களில் தமிழ அரசியல் தலைவர்கள் மாத்திரம் அல்லர், அங்குள்ள சிவில் சமூகங்கள், சமூக ஆர்வலர்கள், அரசியல் ஆய்வாளர்கள் ஒன்றிணைந்து காலி முகத் திடல் போராளிகளுக்கும் தென்னிலங்கை மக்களுக்கும் சர்வதேசத்துக்கும் கூட அரசியல் தீர்வாக தங்களது அடிப்



படை கோரிக்கைகளை தெளிவுபடுத்த கடமைப்பட்டுள்ளார்கள். அவற்றை யதார்த்தமாகப் பேசி வெளிப்படுத்தாமல், தங்களுக்குள்ளேயே முட்டி முனகிக் கொண்டிருப்பதால் மறுபுறத்தில், நாடாளுமன்றப் பெரும்பான்மையால் பேரினவாதம் தனது நிலைப்பாட்டை நியாயப்படுத்தி கொண்டு செல்லும்.

அரசமைப்பைக் கணக்கெடுக்காமல் நாடாளுமன்ற அங்கத்தினர்கள் யாவரையும் வீட்டுக்கு அனுப்பி, ஒரு தேசிய அரசாங்கத்தை அமைத்து விடலாம் என எண்ணிய காலிமுகத் திடல் போராளிகள் ஜனாதிபதியின் மாளிகை, பிரதமரின் இல்லம், அவரது அலுவலகம் என்பவற்றை தமது எழுச்சிகளால் தங்கள் கட்டுப்பாட்டுக்குள் வைத்து, ரணிலை ஒரு நாளாவது ஜனாதிபதியாக அமர விட மாட்டோம் என சூளுரைத்தார்கள். தமிழ்ப் பிரதிநிதிகள் சுமந்திரன், சாணக்கியன் கூட அவரை ஒரு நாள் கூட அப்படி அமர விடக்கூடாது, அதற்கான போராட்டம் முன்னேற வேண்டும் என்று அறிவுறுத்தினார்கள். யார் விரும்பியோ, விரும்பாமலோ ரணில் அந்தப் பதவியில் இடைக்காலத்தில் அடைந்து, கோட்டாவின் பகுதி காலத்துக்கு – மீதி காலத்துக்கு – நாடாளுமன்றத்தினால் நியமிக்கப்பட போட்டியிடப் போகின்றார். இதில் பேரினவாதமும் தார்மீகங்கள் பேசிய காலி முகத்திடல் போராளிகளின் தலைவர்களும் நடந்து கொண்ட சாணக்கியப் போக்குகளை தமிழ் மக்கள் அவதானித்து, தாங்கள் விட்ட வரலாற்றின் பிழைகளை மீண்டும் செய்யாமல், சமயோசிதமாக முன்னேற வேண்டும்.

(வளரும்)

